# தேவ கிருபையிலே பலப்படுங்கள்

“இது என்னுடைய கொள்கை, நான் மற்றவர்களைப் போல அப்படி எல்லாம் செய்ய மாட்டடேன், என்னுடைய தகைமைகள் உங்களுக்கு தெரியாதா? இந்த வேலைகளை செய்து முடிப்படிதற்கு எனக்கு தேவைக்கு மிஞ்சிய அனுபவம் உண்டு, நான் எப்போதுமே நற்கிரியைகளை குறித்த எண்ணமுள்ளவனாக இருக்கின்றேன்.” இப்படியாக விசுவாசிகள் கூறுவதை நாம் கேட்டிருகின்றோம். அப்படி கூறாவிட்டாலும் அத் தகைய எண்ணங்கள் சிந்தைகள் நம்மில் தோன்றுவதுண்டு. இத்தகைய கூற்றுக்களை சில வேளைகளிலே நாம் பெருமைக்காக கூறாவிட்டாலும், நம் வாழ்விலே நம்மை அறியாமல் வழக்கமாக மாறிவிடுகின்றது. வேறு சில சந்தர்ப்பங்களிலே, நாம் நம்முடைய கல்வி, வேலை, செல்வாக்கு, அந்தஸ்து, செல்வம் போன்றவற்றை குறித்து அலட்டிக் கொள்ளாவிட்டாலும், மற்றவர்கள் நம்மைக் குறித்து கூறும் பாராட்டுகள், இவைகளை மையமாக கொண்டதாகவே காணப்படுகின்றது. சுருக்கமாக கூறப்போனால், சிலர் அறிந்தோ அறியாமலோ, இந்த உலகத்திலுள்ள அழிந்து போகும் காரிய ங்களே தங்களடைய பெலன் என்றும், அவைகளால் நாம் எதையும் சாதித்துவிடுவோம் என்றும் எண்ணி விடுகின்றார்கள். நாமோ எப்போதும், கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையிலே பலப்படுகின்றவர்களாக காணப்பட வேண்டும். நம்முடைய சிந்தை, சொல், செயல் யாவும், ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக காணப்பட கூடாது. தேவ ஊழியராகிய பவுல், அந்நாட்களிலே இருந்த மனிதர்களில், இந்த உலகத்தின் அளவுகோலின்படி ஒரு பெரும் கல்விமானும், சமூக அந்தஸ்துள்ளவரும், மதவைராக்கிமுள்ளவரும், சட்டதிட்டங்களின்படி எந்த குற்றமும் செய்யாதவருமாக இருந்தார். ஆனால், அவர் ஆண்டவராகிய இயேசுவை அறிந்த போது, தன்னிடமுள்ளவைகள் யாவும் நஷ்டமும், குப்பையுமாக கருதிக் கொண்டார். “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.” என்று அறிக்கை செய்தார். தன் குறைவுகளிலே தேவ கிருபை நிறைவாக இருக்கின்ற இரகசியத்தை தெளிவாக உணர்ந்து கொண்டார். ஆதலால், அவர் வழிநடத்தி வந்த கர்த்தருக்குள் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவை நோக்கி: நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையிலே பெலப்படு என்று ஆலோசனை கூறினார். அதே போல நாமும் எப்போதும் தேவ கிருபையிலே பெலப்படுகின்றவர்களாக காணப்படுவோமாக.

**2 தீமோத்தேயு 2:1**

ஆதலால், என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு.

**ஜெபம்**: பரலோக தேவனே, நான் ஒருபோதும் இந்த உலகத்தினாலே உண்டாகும் மேன்மைனயான காரியங்களிலே மேன்மை பாராட்டல், உம்முடைய கிருபையை பற்றி வாழும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன்

செவ்வாய் | ஏப்ரல் 2 | 📖 மாலை வாசகம் – நீதிமொழிகள் 16:3

# “உனக்கிருக்கும் பெலன்”

மனித பெலத்தினாலே நடப்பிக்கப்படும் கிரியைகளில் பலன் ஒன்றுமேமில்லை என்று கூறிவிடமுடியாது. சூரியனுக்கு கீழே மனிதன் படும் பிரயாசங்களில் பலன்கள் உண்டு, ஆனால் அந்த பலன்கள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்றும் அந்த பலன்களின் முடிவு இன்னதென்பதையும் ஆராய்ந்து பார்க்க முடியும். ஒரு நகரத்திலே வாழ்ந்து வந்த மனிதனானவன், கடற்கரையின் அருகான பிரதேசத்திலே, தனக்கென்றொரு மாளிகையை கட்டினான். அந்த மாளிகையை கட்டுவதற்கு தேவையான பணத்தை சம்பாதிப்பதற்காக அநேக ஆண்டு கள் பிரயாசப்பட்டான். அந்த மாளிகையானது அழகாக காட்சியளித்தது. சில ஆண்டுகளுக்கு பின்னர், அவன் வாழ்ந்து வந்த நகரத்தை தாக்கிய கடும் புயல்காற்றினால், அந்த மாளிகையானது முற்றாக அழிந்து போய் விட்டது. அந்தக் கட்டினடமானது, கட்டிட பொறியிலாளர்களின் திட்டத்தி ன்படி, ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் அமைக்கப்பட்டது. கட்டிடத் துறையிலே அறிவும், அனுபவமுமிக்க வேலையாட்கள் அந்த மாளி கையை கட்டுவதறகாக வேலைக்கமர்த்தபட்டிருந்தார்கள். அவர்கள் யாவரின் பிரயாசத்திலும் பலன் உண்டாயிருந்தது. விஞ்ஞான துறை யிலே தேர்ச்சி பெற்றவர்கள், அந்த நகரத்தை நோக்கி வரும் பாதக மான காலநிலையை குறித்து முன்னறிவித்திருந்தார்கள். ஆனால், ஒன் றும் அந்த மாளியையை புயலினின்று பாதுகாப்பதற்கு உதவி செய்ய வில்லை. அவன் தன்னுடைய பிராயசத்தையும், அதனால் தனக்குண்டா னவைகள் யாவற்றையும் இழந்து போனான். அழிவுள்ளவைகளை தேடும் மாந்தர்கள் எவரும் இந்த நியதிகளுக்கு விதிவிலக்கானவர்கள் அல்லர். ஆதலால், சூரியனுக்கு கீழே மனுஷன் படும் பிரயாசம் விருதா என்று பிரசங்கி கூறுகின்றார். அவை யாவும் குறித்த காலத்திலே, அறியாத நேரத்திலோ முடிவுக்கு வரும். ஆனால், தேவனுடைய சித்தத்தை தங்கள் வாழ்வில் எப்போதும் நிறைவேற்றுவர்கள் ஒரு போதும் அசைக்கப்படுவதில்லை. மாறிப்போகும் உலகத்தைப் போல அவர்கள் மனம் மாறிப்போவதில்லை. அவர்கள் ஆபத்துக் காலத்திலே மனம் பதறி நிலை தவறிப் போவதுமில்லை. உயர்விலும் தாழ்விலும் வேதனையிலும் சோதனையயிலும், அசையாமல் தேவ வார்த்தையிலே நிலைத்திருப்பார்கள். முடிவிலே, அவர்கள் நிலையான தேவ ராஜ்யத்திலே நீடித்திருப்பார்கள்.

**ஏசாயா 40:31**

**சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன?**

**ஜெபம்**: வழிநடத்தும் வல்ல தேவனே, என் சுய புத்தியின்மேல் சாரமலும், உலக மனிதர்கள் அமைத்த வழிகளில் செல்லாமலும், உம்முடைய வார்த்தையின் வழியிலே நான் வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மாம்சத்தின் பார்வை

மோசேயாவன் பிறந்த போது, அவன் திவ்விய சவுந்தரிமுள்ளவன் என்று அவன் பெற்றோர் கண்டு கொண்டார்கள். எகிப்தின் சகல சாஸ்திர ங்களிலும் கற்பிக்கப்பட்ட அவனுக்கு, சுகபோகமான வாழ்வு அமைந் திரு ந்தது. ஆனாலும், அடிமைத்தனத்திலே துன்புறுத்தப்படும் தன் ஜனங்க ளைக் குறித்த பாரம் அவன் மனதிலே இருந்தது. எகி ப்தை அரசாண்ட பார்வோனினால் அவன் அறியப் பட்டவனாக இரு ந்தான். பெய ரும், புகழும், கல்வியும், செல் வமும் அவனுக்கு தராளமாக இருந்தது. அவன் சரீரத்திலே பெலன் இருந்தது. அவனோ, அடிமைத்தனத்திலிருக்கும் தன் ஜனத்தின் காரியங்களை தன் கரத்திலே எடுத்துக் கொண்டு, தனக்கிருந்த பெலத்தின்படி அவற்றை தீர்த்து வைக்கும்படி கிரியைகளை நடப்பித்தான். அதனால், அவன் தன் உயி ரைக் காத்துக் கொள்ளும்படிக்கு எகிப்து தேசத்தைவிட்டு தப்பி ஓட வேண்டியதாயிற்று. மோசேயானவனின் ஆரம்பி நாட்களை சுருக்கமாக நாம் பார்ப்போமென்றால். அவன் வாக்கிலும் செயலிலும் வல்லவனா யிருந்தான். அவன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாக இரு ந்தான். அதே வேளையில் அடிமைத்தனத்திலிருந்த தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள் விடுதலையடைய வேண்டிய தேவை அங்கே இருந்தது. தன் ஜனங்களைக் குறித்த பாரம் அவன் மனதிலிருந்தது. அப்படியானால், அவன் நடப்பித்த கிரியை களில் தவறு என்ன? கர்த்தருடைய திட்டமானது, கர்த்தருடைய வேளை யிலே, அவருடைய சித்தப்படி நிறைவேறும். அதற்கு முந்தினதோ அல்லது பிந்தினதோ, அவரால் உண்டானதல்ல, மாறாக மனிதர்களு டைய மாம்ச எண்ணப்படி உண்டானது. நாற்பது வருடங்ளுக்கு பின், மோசேயானவன், தன்னால் இனி ஒன்றும் கூடாது என்ற நிலை மையிலிருந்த போது, தேவனாகிய கர்த்தர்தாமே அவனை அழை த்தார். அவன், தன் மனித பெலத்தி னாலும், உலக ஞானத்தினாலும் செய்யக் கூடாத படியிருந்த காரியத்தை தேவ கிருபையினாலே செய்து முடித் தான். எனவே நீங்கள் எத்தகைய அழைப்பை பெற்றிருந்தாலும், எவ்வளவு தகுதியுடையவர்களாக இருந்தாலும், தேவனுடைய வழிநடத் துதலுக்காக காத்திருங்கள். சகலதையும் அறிந்த தேவன் தாமே தாம் முன்குறித்த நேரத்திலே, சகல காரியங்களையும் நேர்த்தியாயும் செம் மையாயும் நிறைவேற்றி முடிப்பார்.

**ஏசாயா 40:31**

**கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்;**

**ஜெபம்**: அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்து முடிக்கும் தேவனே, என் வாழ்வில் நீர் நியமித்திருக்கும் திட்டமானது, உம்முடைய நேரத் திலே, உம்முடைய சித்ததப்படி நடத்தி முடிக்க என்னை வழிநடத்திச் செல் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிருபையும் பிரயாசமும்

பரிசேய சிறப்பு வர்க்கத்தைச் சேர்ந்த சவுல் என்னும் மனிதனானவர், மத வைராக்கியத்திலே மிகவும் உறுதியுள்ளவராக வாழ்ந்து வந்தார். அக் காலத்திலிருந்த மத சட்டதிட்டங்களின்படி குற்றம்சாட்டப்படாத அவர், கல்வியறிவுடையவரும், சமூக அந்தஸ்துள்ளவரும், அதிகாரிகள் மத்தியிலே செல்வாக்குடையவருமாக இருந்தார். ஆனால், அவருடைய பார்வையின்படி, ஆண்டவர் இயேசுவின் சீஷர்களை சிறைப்பிடித்து, சபையை துன்பப் படுத்துவது அவருக்கு நீதியாக காணப்பட்டது. அவருடைய நம்பிக்கையின்படி, அவர் எதிர்பார்த்திருந்த உலகத்தின் இரட்சகராகிய இயேசுவை அறியாதபடிக்கு, மாம்ச சிந்தையினாலே உண்டாயிருந்த அவருடைய பெலன் அவர் மனக்கண்களை குருடாக்கிவிட்டது. முள்ளில் உதைப்பது தனக்கு கடினமானது என்று உணராதவராக, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை துன்படுத்தினார். சட்டதிட்டங்கள், மதக் கொள்கைகளை நிறைவேற்றி முடிப்பதற்கு அரும்பாடு பட்டார். அந்த பிரயாசத்தின் முடிவு அழிவு என்பதை உணராமல், மேலும் கிறிஸ்தவர்களை சிறை பிடிக்கும்படி சென்று கொண்டிருந்த வேளையிலே, வழியிலே, ஆண்டவர் இயேசுவை அவர் சந்தித்தார். அவருடைய மனக்கண்கள் திறக்கப்பட்டது, இயேசு ஆண்டவர் என்பதை அறிந்து கொண்டார். அந்நாள் முதல், கிறிஸ்து இயேசுவின் சுவிசேஷத்திற்காக அதிகமாக பிரயாசப்பட்டார். இந்த பிரயாசமானது கிறிஸ்துவை அறியாத நாட்களிலே நடப்பிக்கப்பட்ட கிரியைகளைப் போலல்லாது, அவர் பெற்றுக் கொண்ட தேவ கிருபையினாலே சாத்தியமானது. பிரியமான சகோதர சகோதரிகளே, தேவ சித்தத்தை நிறைவேற்றுவதற்கு மத வைராக்கியம், கல்வியறிவு, அந்தஸ்து, பொருளாதார செழிப்பு, செல்வாக்கு போன்றவை மட்டும் இருந்தால் போதாது. இவைகளை நாடி, இவைகளின் மேல் நம்பிக்கையாயிருக்கின்ற மனுஷர்களின் வாழ்விலே பல கிரியைகள் இருந்தாலும், அவர்கள் சுயநீதியையே நடப்பிப்பதால், அவர்கள் தேவகிருபையை விருதாவாக்கின்றவர்களாகவே வாழ்ந்து விடுகின்றார்கள். அதனால் துன்பங்ளையும் வேதனைகளையும் உண்டாக்கி விடுகின்றார்கள். நீங்களோ அப்படியிராமல், உங்கள் வாழ்வில் தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறி கிற அறிவினால் கிருபையிலும் சமாதானத்திலும் பெருகுங்கள்.

**1 கொரிந்தியர் 15:10**

**ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை;**

**ஜெபம்**: கிருபையினாலே என்னை இரட்சித்த தேவனே, உம்முடைய சித்தத்திற்கு விரோதமாக நான் மாம்சத்திலே செயற்பட்டு, துன்பங்களை ஏற்படுத்தாதபடிக்கு என்னை உம் வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பின் பிணைப்பு

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த பெற்றோரானவர்கள், தங்களுடைய மகனாவனுக்கு ஏற்ற மணமகளை தெரிந்தெடுத்து, திருமணத்திற்காக ஆயத்தங்களை செய்து வந்தார்கள். மணமகனும், மணமகளும் எல்லா விதத்திலும் பொருத்தமுள்ளவர்களாக காணப்பட்டார்கள். இரண்டு குடும்பங்களுக்கிடையிலேயும், பெரிதான வேற்றுமைகள் எதையும் காண்பது அரிதாகவே இருந்தது. திருமணம் மிகவும் சிறப்பாகவும், விமர்சையாகவும் கொண்டாடிப்பட்டது. திருமணத்திற்கு முன்னும், பின்னும் நடக்க வேண்டிய காரியங்கள் யாவும் ஒழுங்காகவும் நேர்த்தியாவும் நடைபெற்றது. ஆனால், சில ஆண்டுகள் பின்னர் அவர்கள் இருவரும் ஒன்றாக வாழ்வதற்கு அவர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. ஏனெனில், அழகும், அந்தஸ்தும், ஆஸ்தியும், வெளிப்படையான பொருத்தங்கள் தாராளமாக இருந்த போதிலும் அவர்களுக்கிடையிலே அன்பின் ஐக்கியத்தை எற்படுத்த வேண்டும் என்கின்ற எண்ணமோ, கிரியைகளோ இல்லாதிருந்ததால், ஒருவரை ஒருவர் அறியும் அறிவிலே வளருவதற்கு பதிலாக, ஒருவர் மற்றவருடைய வேற்றுமைகளை அறிவதிலேயே வளர்ந்து வந்தார்கள். அதனால், அவர்களுடைய வாழ்விலே அநேக காரியங்களிலே ஒருமனமும், ஏகசிந்தையும் காணப்படவில்லை. பிரியமான சகோதர சகோதரிகளே இன்று சிலருடைய ஆவிக்குரிய வாழ்வும் இப்படிப்பட்ட திருமணத்திற்கு ஒத்தாகவே காணப்படுகின்றது. வெளிப்படையாக நடத்தப்படும் கிரியைகளை பார்க்கும் போது, இவர்கள் கிறிஸ்துவை தரித்தவர்கள் போல காட்சியளிக்கின்றார்கள். அவருடைய நாமத்தை கூறிக் கொள்கின்றார்கள். வாழ்க்கையை கெடுக்கும் தவறான பழக்கவழக்கங்கள், களியாட்டங்கள் முதலான வைகள் இவர்கள் வாழ்விலே இல்லாதிருந்த போதிலும், கிறிஸ்துவை அறியும் அறிவிலே வளர வேண்டும் என்ற எண்ணமோ அதற்குரிய பிரயாசங்களோ அவர்கள் வாழ்விலே இல்லை. அதனால் அங்கே, தேவ அன்பின் பிணைப்பு அவர்களிடத்தில் இல்லை. மணவாளனாகிய கிறிஸ்து என்றும் மாறாதவராகவே இருக்கின்றார். மணவாட்டி சபையாகிய நாமோ, அவர் முன்னிலையில் கறைதிறையற்றவர்களாக காணப்படும்படிக்கு, நாளுக்கு நாள் அவரை அறியும் அறிவிவே வளர்ந்து பெருக வேண்டும். கிறிஸ்துவிலிருந்த சிந்தையிலே வளரும்படிக்கு, தேவ சமுக த்திலே உங்களை தாழ்த்தி ஒப்புக் கொடுங்கள்.

**2 பேதுரு 3:18**

**நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்.**

**ஜெபம்:** கிறிஸ்துவின் சாயலிலே வளரும்படிக்கு என்னை வேறு பிரித்த தேவனே, என் ஆத்துமா எப்போதும் உம்மை வாஞ்சித்து, உமது வழிகளிலே பிரியமாக இருக்கும்படி எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நல்ல போராட்டதை போராடுங்கள்

ஒரு மாணவனாவன், தேசத்திலுள்ள குறிப்பிட்ட கல்லூரியொன்றிலே அனுமதி பெற்றுக் கொள்ளவதற்காக நுழைவு பரீட்சைக்காக தன்னை ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தான். குறித்த நாள் வந்த போது, அந்த பரீட்சையை எழுதி, விசேஷ சித்தியுடன் தேர்ச்சி பெற்றதால், அந்த கல்லூரியில் படிப்பதற்கான அனுமதியை பெற்றுக் கொண்டான். அவன் உள்ளத்திலே பெரிதான மகிழ்ச்சி. தன் வெற்றியை நண்பர்கள் உறவினர்களோடு கொண்டாடினான். பரபரப்போடு அந்த கல்லூரிக்கு சென்றான். அவன் அனுதிப் பரீட்சையில் பெற்ற வெற்றி பராட்டத்தக்கது. ஆனால், அது அவனுடைய இறுதிப் பரீட்சையல்ல, அது ஒரு நல்ல ஆரம்பம். ஆகவே, பரீட்சைகளிலே வெற்றி பெறத்தக்கதாக, அவன் கருத்தோடு தன் பாடங்களை அனுதினமும் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்கொத்தாகவே, நாம் நித்திய அடிமைத்தன கட்டிலிருந்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் வழியாக மீட்பை பெற்றுக் கொண்டோம். அந்த நாள் பாக்கிய நாள்! நல்ல ஆரம்பம்! ஆனால், நம்முடைய போராட்டங்கள் அந்த நாளோடு முடிவடைந்து போகவில்லை. போராட்டங்களை நாம் ஜெயம் கொள்வதற்கு தேவையான ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கத்தை, தேவன்தாமே நமக்கு ஈவாக கொடுத்திருக்கின்றார். என்றென்றைக்கும் நம்மோடு இருந்து, சகல சத்தியத்திலும் நம்மை நடத்தி செல்லும்படிக்கு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிலிருந்த ஆவியை நமக்கு கொடுத்திருக்கின்றார். “மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.” (எபேசியர் 6:12-13). போராட்டங்களை கண்டு சோர்ந்து இளைப்படைந்து போகாமல், நித்திய ஜீவனை பெற்று கொள்ளும் நாள் வரைக்கும், சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமை யையும் தேடுகிறவர்களாயிருங்கள். “உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.”

**1 தெச 5:23**

**சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும்பரிசுத்தமாக்குவாராக;**

**ஜெபம்**: அழியாமையை தரித்துக் கொள்ள என்னை அழைத்த தேவனே, நான் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நம்முடைய பரம பிதா

நீங்கள் ஆராதிக்கின்ற பரம பிதா எப்படிப்பட்டவர் என்று உங்களிடம் யாராவது கேட்டால், நீங்கள் அவர்களுக்கு கூறும் மறுவுத்தரவு என்ன? சிலர், பயங்கரமானவர், பரிசுத்தமுள்ளவர், தண்டித்து நடத்துகின்றவர் என்று தங்கள் மனதிலே திகிலடைந்தவர்களாக பல கிரியைகள், ஒழுங்கு முறைகள், சட்டதிட்டங்கள் வழியாக தங்கள் பரிசுத்தத்தை நிலை நாட்ட முயற்சிக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், மற்றவர்களையும் திகிலடையச் செய்து, விசுவாசத்தையும் பரிசுத்தத்தையும் அவர்கள் வாழ்விலே திணித்து விட முயற்சிக்கின்றார்கள். வேறு சிலர், பரம பிதா, அன்புள்ளவர், கிருபை நிறைந்தவர், மனதுருக்கம் உள்ளவர் என்று கூறி, துணிகரமான அந்தகார கிரியைகளை செய்கின்றவர்களாக காணப்படுகின்றார்கள். இந்த இரண்டு சாராரும், பரம பிதாவின் குணாதிசயங்களை கூறுகின்றவர்களாக இருக்கின்ற போதிலும், அவரை அறிகின்ற அறிவிலே வளராதவர்களாகையால், தவறான முறையிலே அவரை விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். பரம பிதா பரிசுத்தமுள்ளவர். அவர் தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார். (எபேசியர் 1:4). பரமபிதா அன்புள்ளவர், ஆதலால், பாவம் செய்த ஆதாம் ஏவாளை நித்திய ஆக்கினைக்குள் விட்டுவிடாமலும், அவர்கள் வழியாக வந்த மனித குலமானது அந்தகார இருளின் கிரியைகளிலே வாழ்ந்து அழிந்து போகாதபடிக்கும் தம்முடைய குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். குமாரனாகிய இயேசுவை விசுவாசிக்கின்றவன் துணிகரமான செயல்களிலே நிலைத்திருக்க மாட்டான். (யோவான் 3:16-18) அவர் எவனிடத்தில் அன் புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார். (எபிரெயர் 12:6). பரம பிதா, நாம் நிலையற்றவர்கள் என்று அறிந்திருக்கின்றார், ஆதலால் நம்மை திக்கற்றோராய் விட்டுவிடாமல், நம்மோடு இருந்து நம்மை நடத்தும்படிக்கு, தம்முடைய ஆவியானவரை நமக்கு தந்திருக்கின்றார். அத்தோடு, அவர் சர்வ வல்லமையுள்ளவரும், பயங்கரமுள்ளவருமாக இருந்தும், நாம் பயப்படுகிறதற்கு அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் கொடுத்திருக்கின்றார். எனவே நாம் சகல பாவங்களையும் ஒழித்துவிட்டு, பரம பிதாவை அறிகின்ற அறிவிலே வளர்ந்து பெருகுவோமாக.

**1 பேதுரு 2:1**

**இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால்,**

**ஜெபம்:** பரலோக பிதாவே, நான் சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, உம் வார்த்தையின் வழியில் வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரம பிதா பிழைப்பூட்டுகின்றார்

ஒரு கிராமமொன்றிலே, எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்த குடியானவன், நாளாந்த ஊதியத்திலே தன் குடும்பத்தின் தேவைகளை சந்தித்து வந்தான். கிராமத்திலுள்ள பாடசாலையிலே தன் மகனானவன் படிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்து கொடுத்தான். அவன் தன்னுடைய மகனானவனை மேற்படிப்பிற்காக பட்டணத்திற்கு அனுபவதற்கு நிர்வாகம் இல்லாதிருந்த போதும், மகனானவன் கிராமத்திலே வேலை செய்து பிழைப்பதற்கு தன்னால் முடிந்த ஒழுங்குகளை யாவையும் செய்து கொடுத்தான். இவ்வண்ணமாக எந்த ஒரு நல்ல தகப்பனானவனும் தன் பிள்ளைகள் இந்த உலகத்திலே வாழ தேவையானவற்றை அவர்களுக்கு கொடுக்கின்றார்கள். அக்காலத்திலே, தேவ ஜனங்கள் வனாந்திரத்தின் வழியாக, மோசேயினால், வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு நடத்திச் செல்லப்பட்டபோது, அவர்களை போஷிப்பதற்காக, பரம பிதாவாகிய தேவன் தாமே, மன்னாவை பொழிந்தார். மோசே ஜனங்களை நோக்கி: கர்த்தர் கட்டளையிடுகிறது என்னவென்றால், அவரவர் புசிக்கும் அளவுக்குத்தக்கதாக அதில் எடுத்துச் சேர்க்கக்கடவீர்கள், உங்களிலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்தின்படி, அவனவன் தன் கூடாரத்தில் இருக்கிறவர்களுக்காக தலைக்கு ஒரு ஓமர் அளவு எடுத்துக் கொள்ளக்கடவன் என்றான். இன்று மனிதர்கள், நாளைய நாளுக்கு என்ன? அடுத்த கிழமை, அடுத்த மாதம், அடுத்த வருடம், எதிர்காலம் என்று பல காரியங்களை குறித்து கவலைடைகின்றார்கள். திட்டமிட்டு வாழ்வதில் தவறு இல்லை. ஆனால், அந்த திட்டம் தேவனுடைய வார்த்தைக்குட்டபட்டதாக இருக்காவிட்டால், அதனால் உண்டாகும் பலன் அற்பமே. சில விசுவாசிகளும்கூட இந்த உலகத்தின் போக்கில் வாழும் மனிதர்களின் வாழ்க்கையோடு, தங்கள் நிலைமையை ஒப்பிட்டு இவ் வண்ணமாக எதிர்காலத்தைக் குறித்து கவலையடையின்றார்கள். பிரியமானவர்களே, நம்முடைய பரம பிதா பிழைப்பூட்டுகின்றார்! அவர் நம்முடைய தேவைகளை அறிந்திருக்கின்றார். ஏற்ற வேளையில் யாவற்றையும் வாய்க்கப் பண்ணுகின்றார். இன்று அநேக ஏழைகள் ஒரு நேர உணவிற்கு தவிக்கின்ற வேளையிலே, தேவ பிள்ளைகள் எதிர் காலத்தை குறித்து கவலையடைவது சரியாகுமோ? ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள் நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

**மத்தேயு 6:32**

**இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.**

**ஜெபம்**: என்னை வழிநடத்திச் செல்லும் பரம தந்தையே, இந்த உலகத்தின் போக்கை கண்டு குழப்பமடையாமல், முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் உம்முடைய நீதியையும் தேட எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரம பிதாவின் பாதுகாப்பு

பிரியமான சகோதர சகோதரிகளே, "கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வ மாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்து கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது." (சங்கீதம் 33:12).இந்த உலகத்தில் பொல்லாதவர்களாக இருக்கின்ற பெற்றோர், தங்கள் பிள்ளைகளுக்கு நன்மையானவைகளை கொடுக்கின்றார்கள். அப்படியானால், பரலோக த்திலிருக்கின்ற நல்ல பிதாவானவர் எவ்வளவு அதிகமாக நமக்கு நன் யையான ஈவுகளை கொடுப்பார் என் பதை சிந்தித்துப் பாருங்கள். இன் றைய நாளிலே நம்முடைய பரம பிதாவின் பாதுகாப்பை குறித்து சற்று தியானம் செய்வோம். "தாயின் வயிற் றில் தோன்றினதுமுதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியா னதுமுதல் உங்களைத் தாங்கினேன். உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படிச் செய்வேன் நரைவயதுமட்டும் நான் உங்களைத் தாங் குவேன் நான் அப்படிச் செய்துவந்தேன் இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்." (ஏசாயா 46:3-4). ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன் உன் மதில்கள் எப் போதும் என்முன் இருக்கிறது. (ஏசாயா 49:15-16). நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன் நீ ஆறுகளைக் கடக் கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை நீ அக்கினியில் நடக் கும்போது வேகாதிருப்பாய் அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது. (ஏசாயா 43:2). உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான். (சகரியா 2:8). மனிதனுடைய வார்த்தைகளும், பிரபுக்க ளுடைய வாக்குகளும் பூமியிலே அவர்களுடைய வாழ்க்கை காலம் எப்படியிருக்கின்றதோ, அப்டியே அவர்களுடைய வார்த்தைகளும், வாக்குகளும் இருக்கின்றது. மனிதனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான் அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்து போம். ஆனால், நம்முடைய பரம பிதாவானவர் எப்போதும் இருக்கின் றவராய் இருக்கின்றார். பலவான் கையிலிருக்கும் பந்தைய பொருளை ஒருவராலும் பறித்துக் கொள்ளக்கூடாது. "நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்." (சங்கீதம் 100:3). அவரு டைய மேய்ச்சலின் ஆடுகளாகிய நம்மை பிதாவின் கையிலிருந்து பறி த்துக்கொள்ள ஒரு வனாலும் கூடாது.

**யோவான் 10:29**

**அவைகளை என் பிதா வின் கையிலிருந்து பறி த்துக்கொள்ள ஒருவனா லும் கூடாது.**

**ஜெபம்**: என் அடைக்கலமும் அரணான கோட்டையுமான கர்த்தாவே, நான் எப்போதும் உம்முடைய சிறகுகளின் மறைவிவே தங்கியிருக்கு ம்படி எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பில் நிலைத்திருங்கள்

முன்னொரு காலத்திலே, ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த பெற்றோரானவர், தங்கள் மகளானவளை, தாங்கள் விரும்பிய ஒரு குறிப்பிட்ட மனிதனை திருமணம் செய்யும்படி அவளை மிகவும் பலவந்தம் பண்ணினார்கள். அவள் பெற்றோருக்கும் சமுதாயத்திற்கும் கட்டுப்பட்டு இருக்க வேண் டிய சூழ்நிலை காணப்பட்டதால், அவள் தன் பெற்றோரை நோக்கி: நான் உங்கள் இஷ்டப்படி நீங்கள் விரும்பிய மனிதனை உங்களுக்காக திருமணம் செய்து கொள்கின்றேன். ஆனால் என் இருதயமோ அவரோடு இருக்காது என்று கூறி அந்த மனித னை திருமணம் செய்து கொண்டாள். பிரியமான சகோதர சகோதரிகளே, ஒரு மனிதனானவன், தன் பெற்றோருக் காக, தான் பிறந்த வீட்டிற்காக, தான் வளர்ந்த சமுதாயத்திற்காக, தன் முன் னோருக்காக, கிறிஸ்தவன் என்ற நாம த்தை தரித்துக் கொண்டு வாழ்வதானது கிறிஸ்துவோடு வாழும் வாழ்க்கையாகாது. இப்படிப்பட்ட அர்பணிப்பானது, மேலே குறிப்பிட்ட சம்பவத் திலுள்ள பலவந்தம் பண்ணப்பட்ட திருமணத்தைப் போலவே இருக்கும். ஒரு மனிதனுடைய பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே அவனுடைய இருதயமும் இருக்கும். வீட்டிற்காக, ஊரிற்காக, உலகத்தி ற்காக ஒருவன் பல நற்கிரியைகளை நடப்பிக்கலாம் ஆனால் தேவ னைக் குறித்த அன்பு ஒரு மனிதனுடைய இருதயத்திலே இல்லாதிருக் குமென்றால், அவனுடைய கிரியைகள் எல்லாம் விருதாவாக இருக்கும். "எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக் கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை." நம்முடைய சரீரத் தின் கிரியைகள் மாத்திரமல்ல, அதைவிட மேலானதாக, நம்முடைய ஆத்துமா எப்போதும் தேவனை வாஞ்சிக்கின்றதாக காணப்பட வேண் டும். ஒரு மனிதனுடைய ஆசை இந்த பூலோகத்தின் காரியங்களை பற் றியிருந்தால், அதுவே, அவனுடைய பொக்கிஷமாக இருப்பதால், அது அவனை ஆண்டு கொள்ளும். "நாம் தேவ அன்பில் நிலைத்திருக்க வேண்டும். பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன் என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலை த்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண் டிருந் தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்." என்று ஆண்டவரா கிய இயேசு கூறியிருக்கின்றார்.

**யோவான் 15:9**

பிதா என்னில் அன்பாயி ருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கி றேன்; என்னுடைய அன் பிலே நிலைத்திருங்கள்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, இந்த உலக போக்கின்படி வாழாமல், உம்முடைய அன்பிலே நிலைத்திருக்கும்படி எனக்கு உணர்வுள்ள இருத யத்தை தந்து உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பின் கற்பனைகள்

குறித்த ஊர் ஒன்றில் வாழ்ந்து வந்த பெற்றோர்கள், தங்கள் இரண்டு பிள்ளைகளும் அவ்வப்போது சண்டை செய்து குழப்பங்களை ஏற்படுத்துவதைக் குறித்து மிகவும் கரிசனையுள்ளவர்களாக இருந்தார்கள். ஒரு நாள் பிள்ளைகளில் மூத்தவனானவன், தன் இளைய சகோதரனுக்கு விரோதமான காரியத்தை செய்ததால், அவனுடைய தகப்பனானவர் அவனை அழை த்து, உன் இளைய சகோதரனிடம் மன்னிப்பு கேட்டுக் கொள் இல்லாவிடில், ஒரு கிழமை நீ கனணனியில் விளையாட முடியாது அத்தோடு வீட்டின் புறத்தை புல்லு வெட்டி சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்றார். அதற்கு மூத்தவன்: ஒரு கிழமையல்ல, அதை ஒரு மாதம் செய்ய வேண்டும், என்றாலும்பரவாயில்லை, ஆனால், தம்பியிடமோ நான் மன்னிப்பு கேட்க மாட்டேன் என்று கூறினான். அவனுடைய பதிலானது அவன் பெற்றோருக்கு மிகவும் வேதனையாக இருந்தது. அவன் எப்போது உணர்வடையவான் என்று பெரும் எதிர்பார்ப்போடு காத்திரு ந்தார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, “நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்” என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. பொதுவாக மனிதர்கள், வெளியரங்கமாக காரியங்களை நடப்பிக்க ஆவலுள்ளவர்களாகவே இருக்கின்றார். அதாவது, தவறாமல் ஆராதனைக்கு செல்வது, குறித்த நேரத்தில் வேதத்தை வாசித்து ஜெபிப்பது, உபவாச நாட்களை அனுசரிப்பது, தசபாகம் காணிக்கை களை கிரமமாக கொடுப்பது, வறியோருக்கு உதவி செய்வது போன்ற நற்செயல்களை செய்ய ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், உன் மனதிலிருக்கும் கசப்பு நீங்க, உன் பிறனை மன்னிப்பாயாக, அல்லது மன்னிப்பை கேட்டுக் கொள்வாயாக என்ற தேவ கற்பனையை கைகொள்வதைவிட மேலே குறிப்பிடப்பட்ட சம்பவத்தில் மூத்தமகனானவன் செய்தது போல, தண்ட னைகளை சகித்துக் கொள்ளவும் மேலும் தங்கள் சரீரங்களை காயப்ப டுத்தி வருத்தவும் தயாராக இருக்கின்றார்கள். மனதிற்குள் மறைந்திருக் கும் பகை, வன்மம், கசப்பு, வைராக்கியம் போன்ற சுபாவங்களை வாழ்க்கையில் தினமும் பயிற்சிவிப்பதால், தேவ அன்பு இன்னதென்று உணராதபடிக்கு, தங்கள் இருதயத்தை கடினப்படுத்திக் கொள்கின்றார் கள். பிரியமானவர்களே, தேவ அன்பின் கிரியைகளை உங்கள் வாழ்க் கையிலே நடப்பியுங்கள்.

**1 யோவான் 5:3**

**நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, என் மனதும் மாம்சமும் விரும்பிய பரிகாரங்களை செய்யாமல், உம்முடைய வார்த்தையின்படி உம்முடைய திருச்சித்தத்தை என் வாழ்வில் நிறைவேற்றி முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | ஏப்ரல் 12

📖 மாலை வாசகம் - 1 யோவான் 4:7-8

# அன்பின் பெருக்கம்

புதிதாக திருமணமாகிய இளம் தம்பதிகள், ஒருவரையயொருவர் அநேக ஆண்டு கள் விரும்பியிருந்தார்கள். அவர்கள் இருவருடைய குடும்பங்களும்கூட இந்த விஷயத்தில் ஒருமைப்பட்டிருந்தார்கள். ஈரு டலும் ஓருயிரும் என்ற பிரகாரமாக தங்களுக்கிடையே இருந்த அன்பை குறித்து இருவருமே மேன்மை பாராட்டிவந்தார்கள். கணவன் மனை வியாக ஆரம்ப நாட்கள் நன் றாகவே இருந்தது, ஆனால் ஆண் டுகள் கடந்து செல்லும் போது, அவர்கள் இருவருக்கி டையே யுள்ள அன்பு சோதனைக் குட்ப டுத்தப்படும் சம்பவங்களானது வாழ்க்கையிலே ஒன்றின் பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தது. அவர்களுக்கிடையில் கருத்து முரண்பாடுக ளும், வாக்குவாதங்களும் அவ்வப்போது வந்த போதிலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், விட்டுக் கொடுத்து, ஒருவரை ஒருவர் மன்னி த்து, மன்னிப்பை கேட்டு, அன்பிலே பெருகுவதை அவர்கள் வழக்கமும் பழக்கமுமாக்கிக் கொண்டார்கள். அநேக ஆண்டுகள் சென்ற பின்பு, திரு மணமாகுவதற்கு முன்னிருந்த அன்பைக் குறித்த அறிவும் வாழ்க் கையை ஆரம்பித்த நாட்களிலிருந்த அன்பைக் குறித்த அறிவும் எவ்வ ளவு மட்டுப்படுத்தப்பட்டது என்பதை அறிந்து கொண்டார்கள். கணவன், மனைவி இருவரும் பெலவீனமுள்ள மனிதர்களாக இருப்பதால், இரு வரும் புரிந்துணர்விலும் அன்பிலும் வளர வேண்டும். ஆனால், பரலோக த்திலிருக்கின்ற தேவனோ, அன்பிலே, அன்றும், இன்றும், என்றென்றும் சம்பூரணராகவே இருக்கின்றார். பெலவீனராகிய நாமோ தேவ அன் பிலே பூரணப்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஒருவன் தான் தேவனை அன்பு செய்கின்றேன் என்பதை எப்படி தன் வாழ்வில் வெளிக்காட்ட முடியும்? உடன் சகோதரனைக் குறித்த அன்பிலே வளர்வதினால், அவன் தேவ அன்பிலே பெருகின்றவனாக இருப்பான். உடன் சகோதரனிடத் தில் அன்புள்ளவன் என்று எப்படி, எப்போது காண்பிக்க முடியும்? அந்த இளம் தம்பதிகளைப் போல ஆரம்ப நாட்களிளோ? அல்லது அன் பானது சோதனைக்குட்படுத்தப்படும் போதிலோ? பொதுவாக ஆரம்ப நாட்கள் நன்றாகவே இருக்கும். ஆனால் சோதனையின் நாட்களிலே நாம் மற்றவர்களுடைய தப்பிதங்களை மன்னிக்க, குற்றங்களை மறக்க, மன்னிப்புக் கேட்க பழகிக் கொள்ளாவிட்டால், அந்த உறவிலே தேவ அன்பின் பெருக்கம் இருக்காது. தேவனை ஒருவரும் ஒருபோதும் கண் டதில்லை நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக் குள் நிலைத்திருக்கிறார் அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.

**1 யோவான் 4:12**

அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.

**ஜெபம்**: என் பாவ சாபங்களை மன்னித்த தேவனே, நான் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மன்னிப்பை வழங்க, குறைகளை மறக்க, மன்னிப்பை கேட்டுப் பெற்றுக் கொள்ள உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்

நாம் நம் ஆண்டவர் இயேசுவை சந்திக்கும் நாளிலே, நீங்கள் அவரை நோக்கி: உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்று கூறுவதை விரும்புவீர்களா? அல்லது அவர் உங்களை நோக்கி: பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள் தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள் அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள் வஸ்திரமில் லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள் வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள் காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்று கூறுவதை விரும்புவீர்களா? நிச்சயமாக நீங்கள், ஆண்டவர் இயேசு உங்களை நோக்கி கூறும் நல்ல சாட்சியையே விரும்புவீர்கள். அப்படியானால், தீர்க்கதரிசன வரம், பிசாசுகளை துரத்தும் வரம், அற்புதங்களை செய்யும் வரம் அவசியமற்றதா? ஆண்டவராகிய இயேசு வழியாக அல்லவோ நாம் அந்த வரங்களை பெற்றுக் கொண்டோம். ஆம், நாம் பற்பல வரங்களை ஈவாக பெற்றிருக்கின்றோம். நம் தேவனாகிய கர்த்தர்தாமே அதை பகர்ந்து நமக்கு கொடுத்திருக்கின்றார். அவைகள் யாவும், பிதாவாகிய தேவனின் சித்தத்தை நாம் இந்த பூமியிலே நடத்தி முடிக்கும்படிக்காகவே கொடுக்கப் பட்டிருக்கின்றது. ஒருவன் அற்புதங்களை செய்யும் வரமுடையவனாக இருந்து, ஆண்டவர் இயேசுவின் நாமத்திலே பற்பல அற்புதங்களை மற்றவர்களுடைய வாழ்க்கையிலே நடப்பிக்கலாம். ஆனால், அவை யாவும் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்காகவே செய்யப்பட வேண்டும். அவன் மற்றவர்களுடைய வாழ்விலே அற்புதங்களை செய்தும், தான் தன்னுடைய வாழ்விலே தன்னுடைய விருப்பத்தை செய்வானாக இருந்தால், அவன் கனியற்றவனாகவே காணப்படுவான். அவனுக்கிருக்கும் அந்த வரத்தினால் அவனுக்கு வரும் மகிமை இந்த உலகத்தோடு முடிந்து போய்விடும். எனவே நம்மிடத்தில் வரங்கள் இருக்கலாம், வேதாகம கல்லூரி பட்டங்கள் இருக்கலாம், அந்தஸ்து, ஆஸ்திகள், சமுக செல்வாக்குகள் இருக்கலாம். ஆனால், பிதாவாகிய தேவன் விரும்பும் கனிகள் நம்மில் உருவாகுவதற்கு, அவருடைய திருச்சித்த மானது நம்முடைய வாழ்விலே நிறைவேற நாம் இடம் கொடுக்க வேண்டும். "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே," என்று ஆண்டவர் இயேசு கூறும் வார்த்தைகளை கேட்கும்படிக்கு, தேவ சித்தம் நம்மில் நிறைவேற நாம் இடம் கொடுப்போமாக.

**மத்தேயு 7:20**

**ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, உலகம் உண்டானதுமுதல் எனக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவதற்கேதுவான கிரியைகளை நான் நடப்பிக்கும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை

பாபிலோனிய ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் நாட்களிலே, யூதா புத்திரராகிய தானியேல், அனியா, மீஷாவேல், அசரியா ஆகிய வாலிபர்களும் பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டார்கள். இவர்களின் வாழ்க்கையின் சாட்சியை பார்க்கும் போது, இவர்கள் எங்கிருந்தாலும், எந்த சூழ்நிலையிலிருந்தாலும், மனிதர்களையோ, பிரபுக்களையோ, ராஜாக்களையோ பிரியப்படுத்துவதிலும், தேவனாகிய கர்த்தரை பிரியப்படு த்துவதிலேயே மிக வைராக்கியமுள்ள வர்களாக இருந்தார்கள். அது வெறும் மத வைராக்கியம் அல்ல, மாறாக தேவனைக் குறித்த வாஞ்சையும் தாகமும் அவர்கள் இருதயத்திலே இருந்தது. இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார் தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவ னாக்கினார். இதினிமித்தம், இவர்கள் ராஜசமுகத்தில் நின்றார்கள். ராஜாவாகிய நேபுகாத்நேச்சர் தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் இவர்களைப் பத்துமடங்கு சமர்த்தராகக் கண்டான். அதனால் அவர்கள் ராஜாவின் தயவைப் பெற்றுக் கொண்டார்கள். அந்நிய தேசத்திலே கைதிகளாக வந்த இந்த அனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களின் வைராக்கியமானது சோதனைக்குட்படுத்தப்பட்டது. ராஜா நிறுத்திய பொற் சிலையை வணங்குவதற்கு இவர்கள் மறுப்பு தெரிவித்தார்கள். ராஜாவின் தயவே இவர்கள் மேல் உக்கிர கோபமாக மாறியது. அக்கினிச் சூளையானது ஏழுமடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி ராஜாவின் கட்டளை பிறந்தது. அப்பொழுது இராணுவத்திலுள்ள பலசாலிகள் இவர்களை கட்டி, எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போட்டார்கள். இவர்களோ ராஜாவின் தயவைப் பார்க்கிலும், தேவ தயவையே மேன்மைப் படுத்தினதால், தங்கள் உடல்களை சுட்டெரிக்கக் கொடுப்பதற்கும் தயங்கவில்லை. அந்த அக்கினி சூளையின் அனலை விட, ஆராதனை தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கே என்னும் வைராக்கியமானது இவர்கள் உள்ளத்திலே இன்னும் அதிகமாக அனல் கொண்டதாயிருந்தது. ஒரு வேளை இந்த அக்கினி சூளையோடு, பூமியிலே தங்கள் பணி நிறைவேறுவது தேவ சித்தமாக இருந்தாலும், இவர்கள் அதற்கும் ஆயத்தமாகவே இருந்தார்கள். இவர்கள் ஒன்றான மெய்த்தேவனாகிய கர்தரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி, எரிகின்ற அக்கினிக்குத் தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார்.

**தானியேல் 3:17**

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்;

**ஜெபம்**: ராஜாதி ராஜாவாகிய என் தேவனே, இந்த உலகத்திலுள்ள எந்தப் பொருளும், எந்த நபரும், வேறெந்த அந்நிய நாமங்களும் என் வாழ்க்கையிலே விக்கிரகமாகாதபடி என்னைக் காத்துக் கொள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என்னுடைய தலாந்துகள்

தானியேல், அனினயா, மீஷாவேல், அசரியா ஆகிய வாலிபர்களுக்கு, தேவனாகிய கர்த்தர்தாமே, அன்றைய உலகத்திலேயுள்ள எல்லா மனிதர்களையும்விட ஞானத்தையும், அறிவையும் மிகையாகவே கொடுத்தார். ஆனாலும், அவர்கள் தேவனிடம் பெற்றுக் கொண்ட ஞானமும், அறிவும், தேவ சித்தத்திற்குட்பட்டதாகவே இருந்தது. ராஜ சமுகத்திலே தாங்கள் பெற்றுக் கொண்ட உயர்ந்த பதவி பறிக்கப்பட்டுப் போனாலும், தங்களுக்கு மரணம் நேரிட்டாலும் அவர்கள் தேவ சித்தத்தையே தங்கள் வாழ்வில் எல்லா வேளைகளிலும் மேன்மைப் படுத்தினார்கள். இன்றைய நாட்களிலே அந்த வாலிபர்களிடமிருந்த தன்மைகளை விசுவாசிகள் மத்தியிலும் காண்பது மிகவும் அரிதாகவே இருக்கின்றது. வாலிபர்கள் மத்தியில் மட்டுமல்ல, வளர்ந்தவர்கள், உயர்ந்தவர்கள், அனுபவமிக்கவர்கள் மத்தியிலும் இவை குறைவாகவே இருக்கின்றது. படித்து, பட்டம் பெற்று, வேலையில் அமரும் வரைக்கும்,தேவனுடைய நாமத்தைக் குறித்து பல சாட்சிகளைகூறிக் கொள் வார்கள். சபையிலே, அநேகர் அவர்களுடைய முன்னேற்றங்களுக்காக ஜெபிக்கின்றார்கள். ஆனால், வேலையிலும், வெளியிடங்களிலுமுள்ள உலகத்தினால் உண்டாகும் மேன்மையைக் கண்டவுடன், சபையையும், சபை ஊழியர்களையும்,தேவ காரியங்களையும்குறித்துஅவர்களுடைய மனநிலை மாறிப்போய்விடுகின்றது. வேலையை தக்கவைப்பதற்காக, அதிபர்களின் ஆதரவை பெற்றுக் கொள்ளும்படிக்கு, வேலையிலே உண்டாகும் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு, இரவோ, பகலோ, நடு ஜாமமோ, அதிகாலையோ என்று நேரத்தைப் பார்க்காமல், தங்கள் முழு இருதயத்தோடும், முழுபெலத்தோடும் அயராது உழைக்க ஆயத்தமுள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால், தேவனுடைய ராஜ்யத்தின் வேலைக்கு, அதிகமான நிபந்தனைகளை முன்வைக்கின்றார்கள். இவ்வண்ணமாக அவர்களுடைய அறிவும், ஆற்றலும், தேவனுடைய ராஜ்யத்தை கட்டுவதைவிட, இந்த பூமியிலுள்ள எஜமான்களை ஐசுவரியவான்களாகனாக மாற்றுவதே பயனுள்ளதாக அவரடகளுக்கு மாறிவிடுகின்றது. தானியேலும், அவனுடைய நண்பர்களைப் போலவும் நாம் உண்மையுள்ள மனதோடு வேலையை செய்ய வேண்டும். அதே போல நம்முடைய தலாந்துகள் யாவும் தேவ சித்தத்திற்கு உட்பட்டதாயும், தேவராஜ்யத்திற்கு பயனள்ளதாகவும் கணாப்படல் வேண்டும். நாம் மனுஷர்களுக்கல்ல தேவனுக்கே ஊழியம் செய்கின்றோம் அது நம்முடைய பாக்கியம் என்ற சிந்தை நம்மில் ஒவ்வொருவருக்கும் எப்போதும் இருக்க வேண்டும்.

**கொலோசெயர் 3:24**

**எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, என்னிடமுள்ளவைகளெல்லாம் நீர் தந்தவைகள். அவை யாவும் உம்முடைய ராஜ்யத்தின் மேன்மைக்கு பயனுள்ளதாகும்படிக்கு என் மனக் கண்களை திறந்து விடுவீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எதை மேன்மையாக எண்ணுகின்றீர்கள்

> **யோவான் 6:27**
>
> அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்;

ஒரு பாடசாலையிலே கற்று வந்த மாணவனானவன், சில சக மாணவர்களோடு சேர்ந்து, வகுப்பில் கற்றுக் கொடுக்கப்படும் பாடங்களிலே அக்கறையற்றவனாக இருந்தான். ஆதலால், அவனுடைய வகுப்பு ஆசிரியர், பாடசாலை ஒழுங்கின்படி அவனுக்கு கொடுக்கப்பட வேண்டிய தண்டனையை, மற்றய மாணர்கள் முன்னிலையில் கொடுத்து, அவனை நெறிப்படுத்தினார். அந்த செய்தி பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டது. அடுத்த நாளே, பெற்றோர்கள் பாடசாலைக்குச் சென்று, நடந்த சம்பவத்தை குறித்து மேலகதிக விபரங்களை அறிந்து கொண்டு, தங்கள் மகனானவனுக்கு இரக்கம் காட்டும்படி தயவாக வேண்டிக் கொண்டார்கள். அதே மாணவனாவன், சபையிலே, ஒழுங்கற்று நடந்து கொண்டதால், சபையின் மேய்ப்பரானவர், அவனை கடிந்து கொண்டு, அவனுக்கு நல்ல ஆலோனை வழங்கினார். அதை கேள்விப்பட்ட, பெற்றோரானவர்கள், மேய்ப்பரானவர்மேல் கடும்கோபம் கொண்டு, அவரை சந்தித்து, வாலிப பிள்ளைகளை இப்படியாகவா அவமானப்படுத்துவது என்று சபையிலே குழப்பங்களை ஏற்படுத்தி கொண்டார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, சில தசாப்பதங்களாக சபை வாழ்க்கையின் அனுபவத்திலே, இத்தகைய சம்பவங்கள் நான் கண்ட உண்மையாக இருந்து வருகின்றது. அநித்தியமான இந்த உலகத்தின் காரியங்களுக்காக, மனிதர்கள் தவறானது யார் பக்கம் இருந்தாலும், தங்கள் காரியம்ஆக வேண்டும் என்று நீடிய பொறுமையுடன், ஜாக்கிரதையாக நடந்து கொள்கின்றார்கள். சில வேளைகளிலே, தங்கள் காரியங்கள் நிறைவேற வேண்டும் என்று உபவாசித்து ஜெபித்து, சபை நடுவே சாட்சியை கூறிக் கொள்கின்றார்கள். ஆனால், நித்திய ஜீவனுக்குரிய காரியங்களிலே, கால தாமதமின்றி, துணிகரமாக, கலகங்களை ஏற்படுத்த முந்திக் கொள்கின்றார்கள். இது பிள்ளைகளுடைய வாழ்க்கையில் மட்டுமல்ல, வளர்ந்து அனுபவமிக்கவர்களும் இவ்விதமாக, நித்திய ஜீவனுக்குரிய காரியங்களிலே அக்கறையற்றவர்களாகவும் துரிதமாக சண்டைகளையும் வாக்குவாதங்களையும் ஏற்படுத்திக் கொள்கின்றவர்களாவும் மாறிவிடுகின்றார்கள். மனுஷன் படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தானே. (பிரசங்கி 6:7). ஆனால் அவன் ஆத்துமாவிற்கு திருப்தி வேண்டுமானால், அவன் நித்தியத்திற்குரியவைகளுக்கான கிரியைகளை தன் வாழ்விலே நடப்பிக்கின்ற வனாக வாழ வேண்டும்.

**ஜெபம்**: பரலோக தேவனே, அழிந்து போகின்ற இந்த உலகத்தின் காரியங்களை மேன்மைப் படுத்தாமல், அழியாமையைத் தரித்துக் கொள்ளும்படி தேவ வார்த்தையின்படி நடந்து கொள்ள உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நான் யார்?

ஒரு விசுவாசியானவன், அநேக ஆண்டுகளாக வேலை பார்த்து வந்த ஸ்தாபனத்திலே, புதிதாக இணைந்து கொண்ட இயக்குனரானவர், அந்த விசுவாசியாவனை காரணமின்றி சற்று கடுமையாக நடத்தி வந்தார். ஆரம்பத்திலே அவன் கோபமடைந்த போதும், தன் வேலை போய் விடும் என்ற காரணத்தினால், தனக்கு உண்டான இந்த சூழ்நிலையை எப்படி மேற்கொள்வதென்பதைப் பற்றி, வேலையிலே அனுபவமிக்க சக உத்தியோகத்தர்களோடு கலந்தாலோசித்தான். வேலையிலே பிரச்சனைகளை எப்படி சமாளிப்பது என்பதைக் குறித்த, முகாமைத்துவ தத்துவங்களை கொண்ட சில புத்தகங்களை, நூலகத்திலிருந்து படித்தான். சில நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு, தன் மனதை ஆற்றிக் கொண்டு, மறுபடியும் வேலைக்கு சென்று, தான் கற்றுக் கொண்டவைகளின்படி, அந்த இயக்குனரோடு எந்த பிரச்சனையும் ஏற்படாதபடி நடந்து கொண்டான். அதே விசுவாசியாவன் செல்லும் சபையிலே, குறிப்பிட்ட ஒரு மூப்பரானவர், அவனை ஏதோ காரணத்திற்காக கடிந்து கொண்டதால், எந்த தயக்கமுமின்றி, உடனடியாகவே, அவருக்கு பதிலடிகொடுத்து, "நான் யார் என்று உனக்கு தெரியம் தானே" என்ற அந்த மூப்பரானவரை கடுமையாக கடிந்து கொண்டான். இத்தகைய சம்பவங்களை நீங்களும் கண்டிருக்கலாம் அல்லது கேட்டிருக்காலம். ஒருவேளை நீங்களும் அந்த மூப்பரானவரைப் போலவோ அல்லது அந்த விசுவாசியைப்போலவோ இருந்திருக்கலாம். ஆனால், பிரியமான சகோதர சகோதரிகளே, சற்று சிந்தித் துப் பாருங்கள். கர்த்தருடைய வேதம் நம்முடைய கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கின்றது. வாழ்வு தரும் வார்த்தைகளை கொண்ட சத்திய வேதத்தை கரங்களிலே ஏந்தும் நாம், அவற்றின்படி வாழ்வதற்கு பழகிக் கொள்ள வேண்டும். இந்த உலகத்தின் தேவைக்காக சிலர் எதையும் விட்டக் கொடுத்து தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்கின்றார்கள். அப்படியானால் நித்திய ஜீவனுக்காக நாம் எவ்வளவு அதிக ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என் பதை அறிந்து கொள்ளுங்கள். கர்த்தருடைய ஆலயத்திலே பயபக்தி யுடனும், மனத்தாழ்மையுடனும் நடக்க கற்றக் கொள்ளுங்கள். கர்த்தர் யாவற்றையும் அறிந்திருக்கின்றார். எனவே யார் எப்படியாக நடந்து கொண்டாலும், நீங்களோ, கர்த்தருடைய பிரியமான பிள்ளைகளைப் போல நடந்து கொள்ளுங்கள்.

**நீதிமொழிகள் 15:18**

**கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான்; நீடியசாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான்.**

**ஜெபம்:** என் பிதாவாகிய தேவனே, எந்த சூழ்நிலையிலும், நான் மாம்சத்தில் செயற்படாதபடிக்கு உமக்கு பிரியமான பிள்ளையைப் போல நடந்து கொள்ளும்படிக்கு மனப்பிரகாசமுள்ள கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உலகத்தின் உயர்வான இடங்கள்

உன்னதத்திலே உயர்ந்தவராக இருக்கிறவராக இருக்கின்ற நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவானர், இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே தாழ்விடங்களிற்கு வந்தார். தங்களை உயர்ந்தவர்கள், ராஜக்கள், பிரபுக்கள் என்று தங்கள் நீதியை பெருமைபாராட்டுகின்றவர்களையல்ல, பாதாளத்தின் வல்லடியில் அகப்பட்டு, விடுதலையடைய முடியாதிருக்கிற பாவிகளையே விடுதலையாக்கும்படிக்கு, பாதாளம் வரை இறங்கினார் (லூக்கா *19:10*, பிலிப்பியர் *2:6-8*, மாற்கு *2:17*, சங்கீதம் *49:15*, *89:48*). பாவ கட்டுக்களிலே சிறைப்பிடிக்கப்பட்டவர்கள், சமுதாயத்தினால் கைவிடப்பட்டவர்கள், ஆகாதவர்கள் என்று தள்ளப்பட்ட மனிதர்களைஅவர் தேடிச் சென்றார். அவர்கள் எளிமையும் சிறுமையுமானவர் கள் என்று விட்டுவிடாமல் அவர்கள் கூப்பிடும் சத்தத்தைக் கேட்டார். அவர்கள் இருக்கும் இடத்திலே தரித்து நின்று, அவர்கள் தேவைகளை சந்தித்தார். ஆனால் இன்று சிலர், இந்த உலகத்தின் தாழ்விடங்கிளிலிருந்து, உலகத்தின் உயர்விடங்களுக்கு ஏறிவிடுகின்றார்கள். அதாவது, பிரபுக்க ளோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிறார் என்ற வார்த்தையை தவறான முறையிலே புரிந்து கொண்டு, பூமியின் உயர்விடங்களுக்கு ஏறிய பின்பு, அவர்கள் தாழ்விடங்களிலுள்ளவர்களை கண்டு கொள்வதில்லை. அவர்களை கண்டு கொண்டாலும், அவர்களை கீழானவர்கள் என்ற எண்ணத்துடனேயே நோக்குகின்றார்கள். தேவனாலே உயர்த்தப்பட்டவன், அவன் எங்கிருந்தாலும், தேவ ஆவியானவர் அவனோடிருப்பதினால் மனத்தாழ்மையையும், சாந்தமுமுள்ளவனாகவே இருக்கின்றான். கிறிஸ்துவின் சிந்தை அவனுக்குள் இருக்கும். கிறிஸ்துவானவர், “தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.” நீங்களும் அதே சிந்தையுடையவர்களாக இருங்கள். இந்த உலகத்தின் உயர்விடங்களிலே அமர்வதை வாஞ்சிக்காமல், நித்தியமானதுக்குரியவைகளை நாடித் தேடுங்கள். மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்.

**எபேசியர் 4:9**

ஏறினார் என்பதினாலே அவர் அதற்குமுன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா?

**ஜெபம்:** உன்னதமான தேவனே, இந்த உலகத்திலே உயர்ந்த ஸ்தானங்கள் என்ற கருதப்படுவைகளை நான் வாஞ்சிக்காமல், நித்திய வாழ்விற்குரிய மகிமையானவைகளை நாடும்படிக்கு என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உன்னதங்களிலே உட்கார செய்த தேவன்

சின்ன வயதிலிருந்து பல கஷ்டங்கள் மத்தியிலே வாழ்ந்து வந்த விசுவாசியானவன், ஒழுங்காக தன் பாடங்களை படித்து, திறமைச் சித்தியுடன் பட்டம் பெற்றக் கொண்டான். அவன் செய்து வந்த உத்தியோத்திலும் அவனுக்கு பதவியுயர்வுகள் கிடைத்ததினால், சர்வதேச வர்த்தக கருத்தரங்குகளின் பங்கேற்பதற்காக அழைப்பிதழைப் பெற்றுக் கொண்டான். அந்த கருத்தரங்கிலே, உலக பிரசித்தி பெற்ற: கல்விமான்களும், வர்த்தகர்களும், ஐசுவரியவான்களும், விளையாட்டுத்துறை மற்றும் சினிமா நட்சத்திரங்களும் கலந்து கொண்டு அந்த விழாவை சிறப்பித்த அவர்களோடு உட்காரவும், அவர்களோடு சம்பாஷிக்கவும் தனக்கு அரும்பெரும் சந்தர்ப்பம் கிடைத்தது என்று தன் வாழ்வில் ஏற்பட்ட உயர்வைக் குறித்து தனக்குள்ளே பெருமைபாராட்டி வந்தான். சில ஆண்டுகள் சென்ற பின்பு, தேவனாகிய கர்த்தர் தனக்கு ஏற்கனவே கொடுத்திருந்த மேன்மையை உணராதிருந்திருந்ததையிட்டு மனம் வருந்தினான். அது என்னவெனில்: "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்." என்ற வேதத்தின் சத்திய வார்த்தைகளின்படி, திக்கற்றவனாய் வறுமையில் உழன்ற நாட்களிலே, தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, உலகத்தின் போக்கிலிருந்து விடுவித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்திருக்க, நான் மறுபடியும் உலகத்தாரோடு உயர்ந்த ஸ்தானங்களிலே உட்காருவதை என் வாழ்வின் வளர்ச்சியிலே அதிமேன்மையாக கருதியதை தன் அறியாமை என்று உணர்ந்து கொண்டான். பிரியமானவர்களே, நீங்கள் பெற்றுக் கொண்ட அதி மேன்மையான இரட்சிப்பை நீங்கள் உயர்த்துங்கள்.

**எபேசியர் 2:7**

**கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, இந்த உலகத்தின் அறிவினால் உண்டாகும் வஞ்சகமான வலைக்குள் நான் சிக்கிவிடாதபடிக்கு, உம்மை அறிகின்ற அறிவில் வளர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உலகத்தின் போக்கு...

நான் வேலை செய்யும் இடங்களிலே, தங்கள் செயற்பாடுகளை எவ்வளவு நேர்த்தியாகவும், கிரமமாகவும் செய்து தங்கள் குறிக்கோளை அடைந்து கொள்கின்றார்கள். ஏன் சபை ஐக்கியங்களிலே அவர்களைப்போல உங்களுக்கு சிறப்பாக செய்து முடிக்கக் கூடாதிருக்கின்றது என்று ஒரு மனிதனானவன், தன் மேய்ப்பரானவரோடு நொந்து கொண்டான். அந்த மனிதனானவனை சின்ன வயதிலிருந்து நன்கு அறிந்திருந்த மேய்ப்பரானவர், அவனை நோக்கி: மகனே, முதலாவதாக நீ அறிய வேண்டிய காரியம் என்னவென்றால், வியாபார ஸ்தாபனங்களிலே நடப்பது போல், சபையை நடத்துவதற்கு விசுவாசிகளின் ஆத்துமாவானது ஒரு விற்பனைப் பொருளல்ல. இது ஒரு ஆதாய தொழிலு மல்ல. நஷ்டப்படுகின்ற வியாபார ஸ்தாபனங் கள்நிலைநிற்பதில்லை. ஆனால், நன்மை செய்து நஷ்டம் அடைந்தாலும், தேவனுடைய சபையானது நிலைத்திருக்கும். முள்ளின் மேல் உதைப்பது மனிதர்களுக்கு கடினம். அதுமட்டுமல்ல, நான் அறிய, உன் வாலிப நாட்களிலிருந்து, அற்ப காரியங்களுக்காக, நீ எத்தனை முறை இந்த ஐக்கியத்திலே விதண்டாவாதம் செய்திருக்கின்றாய். ஆனால் வேலை செய்யும் இடங்களிலே அநியாயங்கள் நடந்தாலும், நீ உனக்கு தந்த வேலையை, கிரமமாக, நேரத்திற்கு செய்து முடிப்பதற்கு அயராது உழைக்கின்றாய். நீ முன்பு செய்த வேலையிலே, உன் இயக்குனருக்கெதிராக வாயடித்தால், விசாரணையேதுமின்றி, நீ உடனடியாக வேலை நீக்கம் செய்யப்பட்டதை நீ அறிந்திருக்கின்றாய். ஆனால், அதை நீ சபை நடுவிலே நீ துணிகரமாக வார்த்தைகளை பேசிவிட்டு, ஒன்றும் செய்யாதவனைப் போல இருந்து விடுகின்றாய். உலகமும், அதன் போக்கும், அதன் கிரியைகளும் பொல்லாங்களுக்குள் கிடக்கின்றது என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. (1 யோவான் 5:19). கிறிஸ்துவினுடைய உண்மையுள்ள சபையானது, இந்த உலகத்தின் போக்கிற்கு எதிர்த்து நிற்பதினால், உலகமும் அதை சார்ந்தவர்களும் கிறிஸ்துவின் சபைக்கு எதிர்த்து நிற்கின்றார்கள். ஆண் டவராகிய இயேசு கிறிஸ்துவானவரே சபையை கட்டுகின்றவர், பாதாளத்தின் வாசல் அதை மேற்கொள்ளாது என்பதை நீ நன்கு அறிந்து கொள் என்று அவனுக்கு புத்திமதி கூறினார். பிரியமானவர்களே, “நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.”

**ரோமர் 12:2**

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்,

**ஜெபம்**: அநாதி ஸ்நேகத்தால் என்னை நேசித்த தேவனே, நீர் ஏற்படுத்திய சபைக்காக நன்றி. அநித்தியமானவைகளை நித்தியமானவைகளுக்கு ஒப்பானவைகளாக்காதபடிக்கு என்னை காத்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**ஞாயிறு | சித்திரை 21** | 📖 மாலை வாசகம் – 1 யோவான் 1:6

# விசுவாசியாதவர்கள் யார்?

பிதாவாகிய தேவன்தாமே நம்மை, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்திருக்கின்றார். அவர் யாரை அப்படி செய்திருக்கின்றார்? ஏழைகளையோ, ஐசுவரியவான்களையோ, சன்மார்க்கரையோ, துன்மார்க்கரையோ, மதப்பற்றுள்ளவர்களைளோ, நாஸ்திகர்களையோ, கல்விமான்களையோ, கல்லாதவர்களையோ, உயர்ந்தவர்களையோ, தாழ்ந்தவர்களையோ, அதிகாரிளையோ, குடிமக்கள்களையோ? பாரபட்சம் ஏதுமில்லாமல், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவர்கள் எல்லோருக்கும் அந்த பாக்கியத்தை கொடுத்திருக்கின்றார். அப்படியானால் அவரை விசுவாசியாதவர்கள் யார்? அவரை விசுவாசியாதவர்கள் இன்னும் அவிசுவாசிகளாக இருக்கின்றார்கள். அவர்கள் இன்னும் உலக போக்கிலே வாழ்ந்து வருகின்றார்கள். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள் ளாகத் தீர்க்கப்படான் விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று. (யோவான் *3:18* அப்படியானால் அவர்களை நாம் வெறுத்துத் தள்ளிவிட வேண்டுமோ? இல்லை, அவர்களும் நம்மைபோல இரட்சிப்படையும்படி அவர்கள் மனக்கண்கள் திறக்கப்பட வேண்டும் என்று அவர்களுக்காக ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் மேற்குறிப்பிட்டப்பட்ட எந்த குழுவிலே இருந்தாலும், இன்னும் அவிசுவாசிகளாக இருக்கின்றவர்கள். எபேசியர் *2:2* இன் படி, கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் இன்னமும் நடந்துகொண்டிருக்கின்றார்கள். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு கிறிஸ்து இயேசு வழியாக உண்டான இரட்சிப்பை பெற்றுக் கொண்ட ஒரு விசுவாசியானவன், இன்னமும் அவிசுவாசத் திலே வாழ்ந்து கொண்டிருக்கும் ஐசுவரியவான்கள், கல்விமான்கள், உயர்ந்தவர்கள், அதிகாரிகள் போன்றவர்களுடனான ஐக்கியத்தை, தேவ ஆசீர்வாதமும், தன் வளர்ச்சியும் என்று மேன்மைப்படுத்துகின்றனாக இருந்தால், அந்த விசுவாசியின் நிலைமையை எப்படி கூறுவது? பிரியமானவர்களே, உங்கள் சொந்த புத்தியின்மேல் சார்ந்து, சுத்த மனசாட்சியிலே சூடுண்டு போகப் பண்ணிவிடாதபடிக்கு, தேவ வசனத்தின்படி உங்கள் ஐக்கியம் பிதாவோடும், குமாரனோடும், இரட்சிக்கப்பட்ட சக பரிசுத்தவான்களோடும் இருப்பதாக.

**2 கொரிந்தியர் 6:15**

**கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?**

**ஜெபம்:** பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக என்னை அழைத்த தேவனே, நான் உம்மோடு ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லி, இருளிலே நடக்கின்றவர்களோடு ஐக்கியமாக இராதபடிக்கு, என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அநியாயங்களுக்கு உடன்படாதிருங்கள்

எருசலேமிலிருந்து சிறைப்பட்டுப் போன தானியேல் என்னும் தேவனுடைய மனுஷனானவன், நேபுகாசத்நேச்சாரின் ஆட்சிகாலத்திலிருந்து கோரேஸ் ராஜ்யபாரம்பண்ணும் முதலாம் வருஷமட்டும் பாபிலோனிலே இருந் தான். பெலஷாத்சார் என்னும் ராஜாவின் ஆட்சிகாலத்திலே, ராஜாவானவன், ஆயிரம்பேருக்கு ஒரு பெரிய விருந்துசெய்து, அந்த ஆயிரம் பேருக்கு முன்பாகத் திராட்சரசம் குடித்தான். அவர்கள் எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பொன் வெள்ளி பாத்திரங்களில் திராட்சை இரசம் குடித்து, பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவ ர்களைப் புகழ்ந்தார்கள். அந்த வேளையிலே, ராஜாவை கலங்கடிக்கும் ஒரு சம்பவம் நடந்தது. அது என்னவெனில், அந்நேரத்திலே மனுஷ கைவிரல்கள் தோன்றி, விளக்குக்கு எதிராக ராஜ அரமனையின் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதிற்று. எழுதின அந்தக் கையுறுப்பை ராஜா கண்டான். இந்த எழுத்தை வாசித்து, இதின் அர்த்தத்தை எனக்கு வெளிப்படுத்துகிறவன் எவனோ, அவன் இரத்தாம்பரமும் கழுத்திலே பொற்சரப்பணியும் தரிக்கப்பட்டு, ராஜ்யத்திலே மூன்றாம் அதிபதியாய் இருப்பான் என்று சொன்னான். தானியேலுக்குளே புதைபொருள்களை வெளிப்படுத்துகின்ற அறிவும் புத்தியும் விசேஷித்த ஆவியும் இருந்தது. எனவே, அந்த எழுத்துக்களின் விளக்கத்தை கூறி, ராஜ சமுகத்திலே பதவி உயர்வையும், பிரபுக்கள் மற்றும் குடிமக்கள் மத்தியிலே கனத்தையும், மகிமையையும் பெற்றுக் கொள்ளுவதற்கு தானியேலுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். அப்பொழுது, தேவனுக்கு பிரியமான தாசனாகிய தானியேலோ ராஜாவை நோக்கி: உம்முடைய வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும். உம்முடைய பரிசுகளை வேறொருவனுக்குக் கொடும் இந்த எழுத்தை நான் ராஜாவுக்கு வாசித்து, இதின் அர்த்தத்தைத் தெரிவிப்பேன் என்றான். ஏனெனில், ராஜாவானவன், தேவனுடைய காரியங்களை அசட்டை பண்ணுகின்றவனும், தன் இருதயத்தை பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாக உயர்த்தினபடியால், ராஜாவின் வெகுமதி மிகவும் அருவருப்பானது என்று அறிந்திருந்தான். பிரியமானவர்களே, எல்லா பதவி உயர்வும், வெகுமதிகளும், பரிசுத்தமானவைகளல்ல. அவற்றை வேத வார்த்தையின் வெளிச்சத்தில் ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.

**தானியேல் 5:22-23**

**உமது இருதயத்தைத் தாழ்த்தாமல், பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாக உம்மை உயர்த்தினீர்;**

**ஜெபம்**: நீதியின் தேவனே, நான் அறிந்தோ அறியாமலோ, அநீதிக்கும், அநியாயமான பொருட்களிலும், பங்கேற்காதபடிக்கு, என் ஆத்துமாவை பொல்லாப்பிற்கு விலக்கி காத்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யார் ராஜரீக ஆசாரிய கூட்டம்?

அண்டவராகிய இயேசு தாமே, பிதாவாகிய தேவனுக்கு முன்பாக "நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக" ஏற்படுத்தியிருக்கின்றார். அப்படியாக யாரை அவர் ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் ஏற்படுத்தியிருக்கின்றார்? ஐசுவரியவான்களையா? கல்விமான்களையா? அதிகாரிகளையா? அல்லது ஏழை எளியவர்களையா? ஆண்டவராகிய இயேசு வழியாக உண்டான இரட்சிப்பை பெற்றுக் கொண்டவர்கள் யாவரையும், அந்தகார இருளிலிருந்து ஆச்சரியமான ஒளிக்கு கொண்டுவந்தார். இந்த வேத இரகசியங்களை பரிசுத்த ஆவியின் உந்ததலினால், ஆண்டவர் இயேசுவின் பிரதான அப்போஸ்தலராகிய சீமோன் பேதுரு-அவர்கள் எழுதியிருக்கின்றார். அவர் பிரதான அப்போஸ்தலராக இருந்தும், அவருடைய வாழ்வு எப்படியாக இருந்தது? அவர் இந்த உலகத்தின் ராஜாக்களோடு பந்தியிருந்து ராஜாவின் உயர் ரக போஜனங்களை உண்டு வந்தாரா? அல்லது எப்பொழுதும் தன்னை துன்பப்படுத்துகின்ற எதிரிகளுக்கு முன்பாக அவர் பந்தியிருந்தாரோ? இல்லை. அவர் பாடுகள், வேதனைகள், துன்பங்கள் மத்தியிலும், முறுமுறுக்காமல், தன்னை அழைத்த எஜமானனாகிய ஆண்டவர் இயேசுவைப் போல, அவைகளை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தன் வாழ்விலே செய்து முடித்தார். இன்றும் அநேக தேவ பிள்ளைகள், இந்த உலகத்திலே பல கஷ்டங்கள் துன்பங்கள் மத்தியிலே விசுவாச வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்கள். அனுபவிக்கின்றார்கள். அவர்கள் யாவரையும், ராஜாக்களாக ஆசாரியர்களாக அவர் ஏற்படுத்தியிருக்கின்றார். அது எப்படி ஆயிற்று? ஆண்டவராகிய இயேசு வழியாக, நாம், நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக் கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிற வரும், மனுஷரில் ஒருவரும் கண்டி ராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிற பிதாவாகிய தேவனுக்கு பிள்ளைகளாக இருக்கின்றோம். நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணியிருக்கின்றார். அவர் வழியாக, அவரை விசுவாசிக்கின்ற நாம் யாவரும், ராஜரீக ஆசாரிய கூட்டமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றோம்.

**வெளிப்படுத்தல் 1:6**

**தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமேன்.**

**ஜெபம்:** ராஜாதி ராஜாவாகிய தேவனே, நீர் என்னை உம்முடைய பிள்ளையாகும் சிலாக்கியத்தை தந்ததிற்காவும், தைரியமாக கிருபாசனத்தண்டை சேர ஏற்படுத்திய வழிக்காகவும் நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகாத இருதயம்

அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார் எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிறார். (சங்கீதம் 113:7-8) என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப் படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர் என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. (சங்கீதம் 23:5) இந்த வசனங்களானது அநேகரால்விரும்பிகூறப்படும் வாக்குத்தத்தங்களாக இருக்கின்றது. வாக்குமாறாத சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் இவைகளை தம்முடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையிலே நிறைவேற்றி முடிக்கின்றவராயிருக்கின்றார். ராஜாக்களோடு உட்காரும் போது, பகைவர் முன்பாக பந்தியிருக்கும் போதும், உங்களுடைய மனதிலே தோன்றும் எண்ணங்கள் என்ன? நீங்கள் சிறுமைப்பட்ட நாட்களில்,உயர் ஆசனங்களிலிருப்பவர்கள்பெருமைகொண்டு உங்களை அற்பமாக எண்ணி, நகைத்த போது, அவர்களை நகைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகின்றதா? நீங்கள் உயர்ந்த ஸ்தானங்களிலே உட்காரும் போது, சிறுமைப்பட்டவர்களை நீங்கள் எப்படியாக கண்டு கொள்கின்றீர்கள்? நம்முடைய தேவனாகிய கர்த்தர், உன்னதத்திலே வாழ்ந்தாலும், அவர் எப்போதும் சிறுமைப்பட்டவர்கள்மேல் நோக்கமாகயிருக்கின்றார். தாழ்மையுள்ளவனுக்கு கிருபையை அளித்து, பெருமையுள்ளவனை தூரத்திலிருந்து அறிகின்றார். உன்னத்திலே வாழும் தேவன்தாமே, காரணமின்றி காரியங்களை செய்வதில்லை. இந்த உலகத்தின் உயர்ந்த ஸ்தானங்களிலே அமர்வதினால் ஒருவன் நித்திய ஜீவனை அடைந்தாயிற்று என்பது பொருளல்ல. அந்த உயர்ந்த ஸ்தானங்களில் உடக்காருகின்ற சிலர், வேதத்தை மறந்து போய்விடுவதால், அந்த உயர்ந்த ஸ்தானமானது அவர்களுக்கு கண்ணியாக மாறிவிடுகின்றது. சாலமோன் ராஜாவிற்கு தேவனானவர், உலகத்தோர் வியக்கத்தக்க ஞானத்தையும், மிகையான ஐசுவரியத்தையும் கொடுத்தார். காலங்கள் கடந்து சென்ற போது, அவனோ கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற் போனதினால் கர்த்தர் அவன்மேல் கோபமானார். எனவே எந்த ஸ்தானத்திலிருந்தாலும் கர்த்தரைவிட்டு விலகாதபடி உங்கள் இருதயத்தை காத்துங் கொள்ளுங்கள்.

**எபிரெயர் 3:12**

**சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களிலொருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்.**

**ஜெபம்:** அழைத்த தேவனே, பாவத்தின் வஞ்சனையினாலே என் இருதயம் கடினப்பட்டுப் போகாதபடிக்கு, உம்முடைய வார்த்தைகளின் படி நான் நடக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீதியின் பலன்

“போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்” என்ற, வேதவாக்கியத்தை நாம் அறிந்திருக்கின்றோம். கர்த்தருடைய சேவையில் பிரயாசப்படுகின்ற ஊழியன் தன் பிரயாசத்திற்கு தக்க கூலிக்கு பாத்திரவனாக இருக்கின்றான். அந்த கூலியானது அநீதியாக உண்டான கூலியோ, அல்லது அருவருப்புக்குரியதானதாகவோ இல்லாமல், அது நீதியினால் உண்டான கூலியாக இருக்கின்றது. சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் குஷ்டரோகியாக இருந்ததால், சொஸ்மடையும்படி, இஸ்ரவேலிலே இருந்த தீர்க்கதரியாகிய எலிஷாவை சந்திக்கும்படி, நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும், வெகுமதிகளோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான். தீர்க்கதரிசியானவன், அவன் குணப்படும்படிக்கான வழியை அவனுக்கு சொன்னான். ஆரம்பத்திலே அவன் எதிர்த்து நின்றபோதும், பின்னர், தீர்க்கதரிசியானவன் சொன்னபடி செய்து பூரணமாக சொஸ்தமடைந்தான். அவன் மறுபடியும் தீர்க்கதரிசியிடம் வந்து, அவரை நோக்கி: இப்போதும் உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக்கொள்ளவேண்டும் என்றான். அதற்கு தீர்க்கதரியானவன்: நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான். வாங்கவேண்டும் என்று அவனை வருந்தினாலும் தட்டுதல் பண்ணிவிட்டான். ஆனால் எலிசாவின் வேலைக்காரன் கேயாசி, நாகமானின் காணிக்கையை இச்சித்து, இழிவாக ஆதாயத்தை பின்தொடர்ந்து, பொய்யை கூறி, அதை அவனிடம் கேட்டு வாங்கிக் கொண்டான். அதனால், அவன், நாகமானின் குஷ்டரோகத்தை தனதாக்கிக் கொண்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கு வேறு பிரிக்கப்பட்டிருக்கின்றோம். தேவ சேவையின் பாதையில் கஷ்டப்பட்டாலும் நஷ்டப்பட்டாலும் அது தேவனுடைய பார்வையில் பரிசுத்த அலங்காரமாக இருக்கும். அந்த அலங்காரத்தை அநீதியின் ஊதியத்தினாலே மாசுபடுத்திவிடக்கூடாது. கர்த்தர் தம்முடையவர்கள் மேல் நோக்கமாயிருக்கின்றார். அவர் ஒருபோதும் மறந்து போகின்ற தேவனல்லவே. எனவே மனம்பதறி தீவிரமாக தவறான தீர்மானங்களை எடுத்துவிடாமல் அவருடைய நேரத்திற்காக காத்திருங்கள். உங்கள் நீதியின் பிரயாசங்களை அறிந்த தேவன், நீதியின் பலன்களை உங்கள் வாழ்வில் கட்டளையிடுவார். அதன் முடிவு சமாதானமாக இருக்கும்.

**ரோமர் 2:6**

**தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்.**

**ஜெபம்:** பரிசுத்தத்திற்கென்று என்னை வேறு பிரித்த தேவனே, இக்கட்டான நாட்களை நான் கடக்க நேர்ந்தாலும், இழிவான அநீதியின் ஆதயத்திற்கு இணங்காமல் இருக்க மனப்பிரகாசமுள்ள கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மறைதிருக்கும் அடிமைத்தன கட்டுக்கள்

முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தீர்கள், தேவனுடைய கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு அடிமைத்தன கட்டுக்களிலி ருந்து விடுதலையாக்கப்பட்டீர்கள். அடிமைத்தன கட்டுக்கள் என்று கூறு ம்போது, பொதுவாக விசுவாசிகளானவர்கள், மதுபானம், புகைப்பிடி த்தல், போதைவஸ்து, மோக பாவங்கள், விக்கிரக ஆராதனை, நாள் பார்த்தல், குறி சொல்லுதல், பில்லி சூனியம், நெறிகெட்ட திரைபடங் கள் போன்றவைகளையே கருத் தில் கொள்கின்றார்கள். அவை உண் மையிலே அடிமைத்தன கட்டுகளா கவே இருக்கின்றது. "சென்ற வாழ் நாட்காலத்திலே நாம் புறஜாதிக ளுடைய இஷ்டத்தின்படி நடந்து கொண்ட போதும் அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சை களையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொ ண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம்." (1 பேதுரு 4:3). என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. ஆனால், அடிமை த்தன பட்டியல் அத்தோடு முடிந்து போவதில்லை. மேற்குறிப்பிட்ட காரி யங்கள் ஒன்றையும் செய்யாத சில விசுவாசிகளின் மனதிலே கசப்பு, வன்மம், பகை, வைராக்கியம், பிரிவினை போன்ற மாம்சத்தின் இச்சை கள் இருதயத்திலே மறைந்து வளர்ந்து பெருகி, அவர்கள் வாழ்க்கையை அவைகள் மேற்கொண்டு விடுகின்றது. அதனால் அவர்கள் அத்தகைய மாம்ச கிரியைகளுக்கு மறுபடியும் அடிமைகளாகி விடுகின்றார்கள். வெளியரங்கமான மாம்ச கிரியைகளுக்கு அடிமைகளாக இருப்ப வர்கள், ஒருவேளை தங்கள் கிரியைகளைவிட்டு ஓய வேண்டும் என்னும் மனநிலையுடையவர்களாக இருக்கலாம். ஆனால் மறைந்திருக்கும் பாவ அடிமைத்தனங்களை கொண்டவர்கள், தாங்கள் ஆலயத்திற்கு செல்கின் றோம், ஜெபிக்கின்றோம். தானதர்மங்களை செய்கின்றோம் என்று எண் ணங் கொள்வதால், மனதிரும்புதலைக்குறித்த சிந்தையற்றவர்களாக மாறிவிடும் அபாயத்திற்குள்ளாகி விடுகின்றார்கள். எனவே அடிமை த்தன கட்டுக்கள் உங்களை மேற்கொள்ளாதபடிக்கு "நீங்கள் தேவ னால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்க த்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு ஒருவரையொருவர் தாங்கி, ஒரு வர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்."

**கொலோசெயர் 3:16**

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக;**

**ஜெபம்:** அடிமைத்தன கட்டுக்களிலிருந்து என்னை விடுவித்த தேவனே, நான் மறுபடியும் என் அவயவங்களை அநீதிக்குரிய ஆயுதங்களாக ஒப்புக்கொடுக்காமல், உம்முடைய நீதியின் கிரியைகளை நடப்பிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நன்மையாகத் தோன்றும் அடிமைத்தனங்கள்

இன்றைய நாட்களிலே, உலகத்திலே நன்மையாகத் தோன்றுகின்ற காரியங்களை சில விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையிலே நாடித்தேடுவதால், அந்த நன்மையாகத் தோன்றுகின்றவைகளே, அவர்கள் வாழ்க்கையை மேற்கொண்டு விடுகின்றது. இந்த உலகத்திலே நமக்கு தேவைகள் உண்டு. அந்த தேவைகளை சந்திப்பதற்கு இந்த உலகத்திலிருப்பவைகளிலிருந்து தேவையானவைகளை மட்டாக எடுத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.உலகத்திற்குரியவைகள் அவை எத்தகைய நன்மையானதாக காட்சியளித்தாலும்,அவைகள் நம் வாழ்க்கை யை மேற்கொள்ளும் போது, நம்மைஅறியாமலே நாம் அவைகளுக்கு அடிமை களாக மாறிவிடுகின்றோம். இன்னுமொரு விதமாக கூறுவோ மென்றால், அவை நம்மை தேவனிடத்திலிருந்து முற்றிலும் பிரித்து விடுகின்ற விக்கிரக ஆராதனையாகவே மாறி விடுகின்றது. தேன் இனிமையானது. நீ அதைக் கண்டுபிடித்தாயானால், அது உன் உடலுக்கு நல்லது, ஆனாலும் அதை மட்டாய்ச் சாப்பிட வேண்டும். மிதமிஞ்சிச்போனால், அதனால் பின்விளைவுகள் உண்டாகும். இந்த உலகத்திலே கல்வி, செல்வம் போன்றவற்றை இன்று பலர் நன்மையானவைகள் என்று அவற்றை பின்தொடர்கின்றார்கள். இதற்கு சில விசுவாசிகளும் விதிவிலக்கானவர்கள் அல்ல. அவை இரண்டும் இந்த உலகத்திலே சில காரியங்களை நடப்பிப்தற்கு தேவையாக இருக்கின்றது. ஆனால், கல்வியை அதிகமாக கற்று, அதை நாடித்தேடுகின்றவன், இந்த உலகத்தின் ஞானியாக மாறிவிடுகின்றான். அதனால், தேவனுடைய காரியங்கள் அவனுக்கு அற்பமானதாக காணப்படும். இந்த உலக த்தின் தேவைகளை சந்திப்பதற்கு ஒரு பொருளாதார பண்டமாற்றுக் பொருளாக இருக்கின்றது. அதை நாடித் தேடுகின்றவர்கள் பொருளாசையாகிய விக்கிரக ஆராதனைக்கு அடிமைகளாக மாறி விடுகின்றார்கள். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். (1 தீமோ 6:9). பிரியமான சகோதர சகோதரிகளிலே, நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. இந்த உலகத்தினால் உண்டானவைகள் நன்மையானவைகள் அல்ல. இந்த உலகத்திலே வாழும்போது, எல்லாவற்றை யும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன். *(1 கொரி 6:12)*

**நீதிமொழிகள் 25:16**

**தேனைக் கண்டுபிடித்தாயானால் மட்டாய்ச் சாப்பிடு; மிதமிஞ்சிச் சாப்பிட்டால் வாந்திபண்ணுவாய்.**

**ஜெபம்**: பரலோ ராஜ்யத்திற்கென்று என்னை அழைத்த தேவனே, இந்த உலகத்திலுள்ளவைகள் என் வாழ்வை ஆண்டு கொள்ளுவதற்கு இடங் கொடாமல், உம்முடைய வசனத்தின்படி வாழ என்னை நடத்திச் செல் வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உணர்வற்ற அடிமைத்தனங்கள்

ஒரு வாலிபனானவன், தன் அயலிலுள்ள சக மாணவர்களுடன் விளை யாடிக் கொண்டிருக்கும் போது, இடைவேளையிலே, தெருவின் மேற்பு றமாக வசிக்கும் பணக்கார குடும்பத்தை சேர்ந்த இன்னுமொருவன், அந்த வாலிபனை நோக்கி: தாங்கள் உயர்ந்த வகுப்பை சேர்ந்த, செல் வாக்கு நிறைந்த, ஆசீர்வதிக்கப்பட்ட கிறிஸ்தவ வர்க்கத்தை சேர்ந்தவ ர்கள் என்றும், தங்கள் ஆலய பீடம் பளிங்கு கற்களால் கட்டப்பட்டிருக்கி ன்றது என்றும் தன்னுடைய குடும் பத்தார் சொன்னார்கள் என்று தன் குடும்பத்தைப் பற்றிபெருமிதமாக கூறி க்கொண்டான். ஏன் அப்பா, நம்மு டைய சபை இப்படி ஏழ்மையாகவும், தாழ்மையாகவும் இருக்கின்றது? கர் த்தர் நம்மை ஆசீர்வதிக்கவில்லையா என்று ஒரு மகனானவன், தன் தக ப்பனானவரிடம் கேட்டுக் கொண்டான். அதற்கு தகப்பனானவர் தன் மக னானவனை நோக்கி: மகனே, இந்த உலகிலே வாழும் சில விசுவாசி கள், தங்களை அறியாமலேயே பற்பல அடி மைத்தனங்களுக்குள்ளே சிக்கியிருக்கின்றார்கள். தங்களை மேன்மக்கள் என்றும் மற்றவர்களை கீழ்மக்கள் என்றும் இந்த உலகத்தின் சமுக அந்தஸ்தின் அளவுகோலி ன்படி அவர்கள் தேவ பிள்ளைகளை வேறு பிரிப்பதினாலே, அவர்கள் சமுக அந்தஸ்துக்கு அடிமைகளாக இருக்கின்றார்கள். அவர்கள் அறி யாமைக்காக நீ ஜெபம் செய்ய வேண்டும். நாம் கூடி ஆராதிப்பதற்கு ஒரு ஆலயக் கட்டிடம் தேவை ஆனால் அதை விலையுயர்ந்த வஸ் துக்களால் அலங்கரிப்பதைவிட, நாம் நம் உள்ளத்தை ஆவியின் கனிக ளால் அலங்கரித்து, தாழ்மையுள்ள இருதயத்தோடு, தேவனுடைய சமு கத்திற்கு செல்லவேண்டும். இந்த உலகத்தின் மேன்மைகளினால், ஒருவ னும் தேவனைக் கவர்ந்து கொள்ள முடியாது. தேவனுடைய வார்த்தை யின்படி வாழ்ந்து, பிதாவின் சித்தத்தை நிறை வேற்றுகின்றவர்கள்மேல் அவர் பிரியமாக இருக்கின்றார். எனவே, நீ மனத்தாழ்மையோடு நமக்கு கிடைத்த தேவனுடைய கிருபையைக் குறித்தே மேன் மைபாராட்டு என்று தகப்பனானவர் அறிவுரை கூறினார். ஆம், பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று சில விசுவாசிகள் சமுக அந்தஸ்து என்னும் அடிமைத்தனத்திலே அகப்பட்டு வஞ்சிக்கப்பட்டு போய்விடுகின்றார்கள். நீங்களோ, ஜாக்கிரதையுள்ளவர்களாக நடந்து கொண்டு, தேவ கிருபையையும், கர்த்தருடைய சிலுவையையுமேயன்றி வேறொன் றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பீர்களாக.

**ரோமர் 6:16**

**எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோஇ அதற்கே கீழ்ப்படிகிற அடி மைகளாயிருக்கிறீர்களென் று அறியீர்களா?**

**ஜெபம்**: கிருபையினாலே இரட்சித்த தேவனே, மறுபடியும், என்னிட த்திலுள்ளவைகளை குறித்து நான் மேன்மைபராட்டாதபடிக்கு, மன த்தாழ்மையோடு உம்மை சேவிக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தரு ள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இன்னும் தேவை

இந்த உலகத்தினால் உண்டாக்கப்பட்டு, இந்த உலகத்தோடு அழிந்து போகின்ற, நன்மையாகவே தோன்றுகின்ற எந்த காரியத்தையும் நாம் மட்டாகவே, தேவைக்கு ஏற்றபடி எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது, இந்த உலகத்திலிருந்து நாம் கடந்து போகும்போது கொண்டு செல்ல முடியாத எந்த காரியமும் நம் வாழ்விலே மிதமிஞ்சிப்போகும் போது, அதனால் பல கண்ணிகளும், ஆரோக்கிய குறைபாடுகளும், சமா தானமற்ற வாழ்வும் அவைகளின் பின் விளைவுகளாக இருக்கும். தேனை கண்டு பிடித்தால் மட்டாக சாப்பிடு, மிதமிஞ்சிப்போனால் வாந்தி உண்டாகும். ஆனால், “தேனினிமையில் இயேசுவின் நாமம் திவ்விய மதுரமாமே” என்று ஒரு பாடலின் வரியானது அழகாக அமைக்கப்பட்டுள்ளது. அந்த நாமத்தின் இனிமையை ருசிபார்த்தவர்கள், அதன் மேன்மையை அனுபவித்தவர்கள், நாட்கள் செல்லச் செல்ல, அவரை அறிகின்ற அறிவிலே வளர வளர, “எனக்கு இன்னும் தேவை” என்றே கூறிக் கொள்கின்றார்கள். வானோர், பூதலத்தோர் போற்றும் நாமம், இயேசுவின் நாமம். பேய்கள் நடுங்கும் நாமம் இயேசுவின் நாமம். நேற்றும் இன்றும் என்றும் மாறிடாத நாமம், இயேசுவின் நாமம். எல்லா நாமத்திற்கும் மேலான நாமம், இயேசுவின் நாமம். இயேசுவின் நாமத்திலே, மன்னிப்பு, இரட்சிப்பு, விடுதலை, சமாதானம், நித்திய வாழ்வு நமக்கு உண்டாயிருக்கின்றது. அவருடைய அன்பு, அகலம், நீளம், ஆழம், உயரம் அறிய முயடியாதது. இயேசுவின் நாமமானது, எவருடைய வாழ்விலும் மிதம்மிஞ்சிப் போவதில்லை. ஆண்டவர் இயேசுவை அறிகின்ற அறிவிலே வளர்வதென்பது, பரிசுத்த வேதாகமத்தை அனுதினம் வாசித்து, தியானித்து மனனம் செய்வதோடு முடிவதில்லை. வாழ்வின் நாளாந்த அலுவல்களை கவனிக்காமல், தேவ செய்திகளை கேட்டு, ஜெபித்துக் கொண்டிருப்படிருப்பதென்பது பொருளல்ல. பரிசுத்த வேதாகமத்தை, வாசித்து, தியானித்து, மனனம செய்து, தேவ செய்திகளை கேட்டு, அனுதினமும் ஊக்கமாக ஜெபித்து, நம் அனுதின வாழ்க்கையிலே தேவ வார்த்தைகளை அனுபவித்து ருசி பார்க்கின்றவர்களாக இருங்கள். தீமைகளை நன்மை செய்வதினாலே மேற்கொள்ள பழகிக் கொள்ளுங்கள். அறிவுக்கெட்டாத தேவ அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறைவாகுங்கள்.

**சங்கீதம் 119:103**

**உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்.**

**ஜெபம்:** நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற தேவனே, நான் அனுதினமும் உம்மை அறிகின்ற அறிவிலே வளர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழைப்பின் கருப்பொருள்

பெரிய பட்டணமொன்றிலே சுதந்திரமாக வாழ்ந்து வந்த மனிதனானவன், தன் ஓய்வூதிய நாட்களை தூரத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட கிராமமொன்றிலே கழிக்க வேண்டும் என்ற ஆசையுடன், குறித்த கிராமத்திலே ஒரு அழகான வீட்டை கட்டுவித்தான். அந்தக் கிராமமானது, இயற்கையாகவே அழகும், எழிலும் உள்ளதாகவும், வளி (air) மாசற்றதாகவும் இருந்தது. ஏனெனில், அந்த கிராமத்தில் வசித்துவந்தவர்கள், தங்கள் சொந்த நலன்கருத்தி, அக்கிராமத்தின் சூழல்தொகுதியை மாசுபடுத்தாமல், தொண்டு தொட்டு, அந்த கிராமத்தின் இயற்கை அழகை பேணிப் பாதுகாக்கும்படிக்கு அக்கிரமத்திற்கு ஏற்றபடி வாழ்வதை இயல்பாக்கிக் கொண்டு வந்தார்கள். தன் ஒய்திவூதிய நாட்களை கழிக்க வந்த மனிதனானவனோ, அந்த கிராமத்தின் யாப்பு நூலையையும், சட்டதிட்ட ஒழுங்கு முறைகளையும் மிகவும் கிரத்தையுடன் படித்து வந்தான். அந்த நூலின்படி, தான் ஆசையுடன் பட்டணத்திலே செய்து வந்த கிரியைகளில் எதையெல்லாம, குற்றம் சாட்டப்படாமல் செய்யலாம்? கிராமத்தின் நீதிமன்றத்தின் முன்னையிலே எதையெல்லாம், தான் ஜெயித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடனேயே அவைகளை படித்து வந்தான். சுருக்கமாக கூறப்போனால், தான் மாசற்ற அந்தக் கிராமத்திலே வாழ வேண்டும், ஆனால் தன் வாழ்க்கையை அதற்கேற்றபடி முற்றாக மாற்றாமல், தன் இச்சைகளை சட்டபூர்வமாக நடப்பிக்க வழிகளை தேடி வந்தான். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று தங்களை விசுவாச மார்க்கத்தார் என்று கூறிக் கொள்ளும் சிலர், அந்த மனிதனானவனைப் போலவே வாழ விரும்புகின்றார்கள். அவர்கள் வாழ்வதற்கு உலகத்திலே எத்தனையோ இடாம்பீகரமான, மனிதர்களினாலே போற்றப்படும் இடங்கள் அநேக மாயிருந்தும், கர்த்தருடைய வீட்டிலே, வாழ வேண்டும், கர்த்தருடைய நாமத்தை தரிக்க வேண்டும் ஆனால், தங்களுக்குள் இருந்து வந்த பழைய இச்சைகளை, சட்டபூர்வமாக அனுபவிப்பதற்கு வேதத்தை ஆராய்ந்து பார்க்கின்றார்கள். சத்திய வேதத்தின் கருப்பொருளாகிய நித்திய ஜீவனை கண்ணோக்காமல், தங்கள் இச்சைகளை நிறைவேற்ற வெகுவாய் பிரயாசப்படுகின்றார்கள். நீங்களோ, அப்படியான எண்ணங்கொள்ளாமல், பரம பந்தையப் பொருளின் இலக்கை நோக்கி முன்னேறுங்கள்.

**கலாத்தியர் 5:13**

**இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்.**

**ஜெபம்:** சுயாதீனத்திற்கென்று என்னை அழைத்த தேவனே, என் எண்ணங்களை நிறைவேற்ற வழிகளை தேடாமல், அழைப்பின் இலக்கை நோக்கி நான் முன்னேறும்படிக்கு உணர்வுள்ள இருயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.